
# சிரித்திரன்

உண(ர்)வுதேடும்
படலம்




SIRITHITAN ஒக்டோபர்—1980

விலை 1-35

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**விருந்துச் சாப்பாடோ
என வியக்க வைக்கும்
உணவிற்கும்
சிற்றுண்டி வகைகளுக்கும்**

*யாழ்நகரில் இணையற்ற
புகழ்வாய்ந்த ஸ்தாபனம்*

# ஸ்ரீ தாமோதர விலாஸ்

**காங்கேசன்துறை வீதி
யாழ்ப்பாணம்.**

---

**இசையால் வசமாகா இதயமெது?**

- *உங்களை மெய்மறக்கச் செய்யும் கர்னாடக இசை மேதைகளின் கச்சேரிகள்.*
- *திரைஇசைப் பாடல்கள்*
- *பக்திப்பாடல்கள்*
- *தனிப்பாடல்கள்*

*அனைத்தையும் நவீன எலெக்ரோனிக் கருவிகள் மூலம் துல்லியமாக ஒலிப்பதிவு செய்து தருவதிலும் — ரேடியோ — ரேப்ரெக்கோடர்கள் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்தையும் [illegible]த்தம் செய்வதிலும் விற்பனை செய்வதிலும் முன்னணியில் திகழ்பவர்கள்.*

# ரேடியோஸ்பதி

# radios pathy

**58, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7805.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரித்திரன்

செய்தொழிலே தெய்வம்
சிரிப்பே ஜெயம்


ஒக்டோபர்: 1980 நகை: 18 சுவை: 8


**பேரன்புக்குரிய வாசகர்களே!**

- நிலைக்கண்ணுடியூடாக, சிரித்திரன்மீது ஆத்மார்த்த மான பாசமும், பற்றும்மிக்க வாசக சோதரருடன் தன் 'நிலை'யை அடிக்கடி இல்லாவிட்டாலும், இடைக்கிடையாவது சிரித்திரன் தெளிவுபடுத்தியே வந்திருக்கிருன்.

சிரிக்கவைக்கும் மகிழ்ச்சிகளை மட்டும் பகிர்ந்து கொ... நும் நட்பு அல்ல நம்முடையது, சிந்திக்க வைக்கும் பிரச்சனைகள், நெருக்கடிகள் ஆகியன வற்றையும் பகிர்ந்து, புரிந்துகொண்டு பரஸ்பரம் நம்மிருவருடைய பரிணும வளர்ச்சிக்கும் இணைக் கரம் பிணைக்கும் அர்த்தபுஷ்டியான, ஆழமான பாசம் நம்முடையது.

இப்பொழுது ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் இருவருக்குமே பொதுவானதுதான், பட்டம் விடுபவன் கயிற்றினை வெட்டி இழுத்து காற்றைக்கிழித்து பறக்கவிடுகின்ற பட்டம் வெகு வேகமாக மேலே எழுவதுபோன்று 'விலை' வாசியை மிகவேகமாக உயர்த்திக் கொண்டே போகிருர்கள். அதுவும் கிராமவாசி, நகரவாசி, என்றுபேதம் பாராது அனைவரையும் கிழித்துக் கொண்டே உயர்கிறது. இதனூடே சிரித்திரன் போன்ற சஞ்சிகைகளை அச்சுறுத்துவதுபோல் அச்சுத்தாளின் விலை தாழாவிலையாக உயர்ந்துவிட்டதை தாழ்மையுடன் தெரிவிக்க விரும்புகிருன் சிரித்திரன்.



- என்ன செய்வது, உலகின் பொதுவான நெருக்கடிகள் என்று ஆட்சியாளரால் பிரகடனப்படுத்தப் படுவதெல்லாம் நம்மைப் போன்ற சாதாரணமானசராசரி மனிதர்களையே அதிகம் பாதிக்கிறது.

- பிரச்சனைகளையே எதிர்நோக்கி போராடிப்பழகிப் போன உயர்ந்த இலட்சிய இதயங்கள் கூட சில சமயங்களில் சோர்ந்து துவண்டு போகின்ற அளவிற்கு பிரச்சனைகளின் பளு அதிகமாகிக்கொண்டே போகிறது.

- சிரித்திரனையும் இப்பளு மிகமோசமாக அமுக்கவே செய்துள்ளது. தாள் விலையுடன், மை, அச்சுக்கூலி தபாற்செலவு, சம்பளம், இப்படி அதிகரிப்பவை பல... ஆகவே இந்தப்பளுவை ஓரளவேனும் குறைத்து, தன் இலட்சியப் பணியில் தொடர சிரித்திரன் அடுத்த இதழிலிருந்து **1·90** ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

- மனித சமூகத்திற்கு மகிழ்ச்சியையும், சிந்தனை மலர்ச்சியையும் வளங்கும் சிரித்திரனின் இலட்சிய பணியைத் தொடர வாசக சோதரர்கள் பெருந் தன்மையுடன் இவ்விலையுயர்வை ஏற்றுக்கொள் வார்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

- உங்கள் அன்புக்கு நன்றி.

(ஆ—ர்)

---

## அருட் தந்தைக்கு அஞ்சலி


நம்—
தவநாயகமாய்ப் பிறந்து
தமிழ் நாயகமாய் மறைந்த
தனிநாயகத் தந்தைக்கு
எமது அஞ்சலிகள்.

## இசைத் தாய்க்கு அஞ்சலி

கானமுகிற்கூட்டம்
கவினுறுதேமதுரமழை
ஞானஇசைவெள்ளம்
நமைவிட்டுப்போகவில்லை.

தெய்வத் தமிழெடுத்து
தீஞ்சுவைசேர் பாகுழைத்த
மெய்ஞானப் பழத்தின் சுவை
மேதினியில் நின்றினிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சி சரோஜா முகத்துவாரம்

கே; விலைவாசிபற்றி உமது கருத்து என்ன?

ப: அன்றுஒரு வாழைப்பழக்குலை யின் விலைதான் இன்று ஒரு வாழைப்பழத்தின் விலை,

● □

ம. ஜெயசீலன் கரவெட்டி

கே: எழுத்தாளர்கள் சண்டை பிடிக்கலாமா?

ப; மக்களின் தலை எழுத்தை எழுதும் பிரமாக்கள் சண்டை பிடிக்கலாமா?

● □

சி. ஸ்ரீதரன் மட்டக்கிளப்பு

கே; இன்று மனிதனின் துடிப்பு என்ன?

ப; விடியுமுன் பணக்காரனுக வேணுமென்பது.

● □

மு. தர்மராஜா திருகோணமலை

கே: ஏழையால் நாட்டிற்கு நன்மை உண்டா?

ப: தாய்மொழியைப் பேசுபவனும் அவன் தாய்குலத்திடம் சீதனம் கேளாதவனும் அவன்.

● □

த. ராஜமோகன் விஸ்வமடு

கே; இன்று எமது நாட்டின் நிலை என்ன?

ப; கட்டிடங்களும் விலைவாசியும் வளர்கிறது உயிரும் பயிரும் வாடுகிறது.

மு. அமுதன் பளை

கே: நாட்டிற்கு அரசியல் கட்சிகளின் மேடைப்பேச்சால் நன்மை உண்டா?

ப: ஒலிபெருக்கியில் 'பார்டி'கள் சொல்லும் கதைகளில் முற்றத்தில் நிலாஒளியில் பாட்டிகள் சொல்லும் கதைகளால் நன்மை உண்டு

● □

அப்துல்ஜபார் கல்முனை

கே; விஞ்ஞானியா அரசியல்வாதியா மேலானவன்?

ப: விஞ்ஞானி. அண்டங்களைப் பிணைப்பதற்கு விமானத்தை உற்பத்தி செய்தான் அரசியல்வாதி பிரிப்பதற்கு விசாவை உண்டு பண்ணினுன்.

● □

சி. இராமநாதன் வெள்ளவத்தை

கே; தற்கொலை செய்ய ஒருவழி கூறும்?

ப: உன்னைப் புழுகும்.

● □

த. சுகுமார் விசுவமடு

கே: உமக்கு சினிமா விசிறிகளைப் பிடிக்குமா?

ப: புழுக்க காலத்தில் அந்த விசிறிகளால் ஏதுபலன்.

★ □

மு. திருச்சந்திரன் உரும்பிராய்

கே; தலையில்லாதவனை எமது வழிகாட்டியாக ஏற்றுக்கொள்ளலாமா?

ப: தலையில்லா நெருப்புக்குச்சி ஒளிதராது.

ச. வரதராஜன் பரந்தன்

கே; உலகயுத்தம் வந்தால்...?

ப; அரசியல் ஞானியும்சாம்பல்... விஞ்ஞானியும் சாம்பல்

● □

சி விசாகன் மானிப்பாய்

கே: சமாதான காலத்திற்கும் யுத்தகாலத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: சமாதான காலத்தில் பிரமன் செய்த விவசாயத்தை யுத்த காலத்தில் இயமன் அறுவடை செய்கின்றுன்.

● □

த. மயில்வாகனம் கொழும்பு

கே: உமக்குப்புரியாத புதிர் என்ன

ப; இரவில் ஆட்சி செய்யும் இருள் பகலில் எங்கேஒளித்திருப்பது என்பதுதான்.

● □

சி. நகுலேஸ்வரன் இருபாலை

கே; தன்மானம் மிக்கவனுக்கும் தன்மான மற்றவனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: யாமார்க்கும் குடியல்லோம் என எண்ணுபவன். தன்மானம் மிக்கவர்கள் யாமாரிடமும் குடிப்போம் என எண்ணுபவர்கள் தன்மான மற்றவர்கள்,

● □

தேவமனேகரி தம்பிராசா நல்லூர்

கே: தமிழ் சமூகத்தில் சீதனம் கொடாமல் ஒருபெண் திருமணம் செய்தால்?




ப: மாமியாரிடம் மங்களம் பெறுவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனகரத்தினம் அடம்பன்

கே: சினிமாவிற்கும் தமிழ் நாட்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?



ப: அபின் மயக்கத்தில் மண்டிக் கிடந்த சீனப்பெருந்தேசம் இன்று ஒரு மாபெரும் வல்லரசு... தமிழ்நாடு இன்று சினிமா மயக்கத்தில் சீரழிந்து கொண்டிருக்கின்றது.

● ☐

மு. வி. ஹமீட் அக்கரைப்பற்று

கே; பிரமுகர்களைப் பாராட்டி விட்டு பணம் பெறுவோர் பற்றி உமது கருத்து?

ப: பாராட்டிவிட்டு பணமுடிச்சுப் பெறுபவன் முடிச்சுமாறியிலும் கீழோன்.

● ☐

சி. தாரணி அல்வாய்

கே: பாரதி ஒரு தமிழின வெறியனா?

ப: இல்லை... சிங்கமராட்டியர் என்றான். சுந்தரத் தெலுங்கு என்றான் கவின் மலையாளம் என்றான் ஜாரின ஆட்சி சரியுது என்றான்...

● ☐

சி. தவசீலன் வவுனியா

கே; எதால் நாட்டிற்கு நன்மை உண்டு?

ப: மனிதன் புகழ்நாட்டுவதால் அல்ல மரம் நாட்டுவதால்

● ☐

வி. மோகன்குமார் மூதூர்

கே: பாரதியார் பாடல் பற்றி உமது கருத்து?

ப; பாரதப் பா—ரதம்

த. சிவச்செல்வன் மந்திகை

கே; உமக்கு எப்போ சிரிப்பு எழுகிறது?

ப: எனக்கு தேசியப்பற்று இல்லாத மக்கள் தேசியப்பாடலுக்கு எழுந்து நிற்கும்போது சிரிப்பு எழுகிறது.

● ☐

சி தவச்செல்வன் முல்லைத்தீவு

கே: காதல் பசியில் இருப்பவனைப் பார்த்து காதலி சிரித்தால்?

ப: அவள் சிரிப்பு காதல் கஞ்சிக்கு உப்பிட்டது போலிருக்கும்.

● ☐

வி. ரமணன் மானிப்பாய்

கே: எப்படிப்பட்ட சமுதாயத்தில் ஓவியர்கள் வாழமுடியாது?

ப: சைத்தான்கள் நிறைந்த சமூகத்தில் சைத்திரிகர் வாழ்வதில்லை.

● ☐

எஸ். தியாகராசா இணுவில்

கே: எமது நாட்டில் தேனும் பாலும் ஓடுகிறதா?

ப; ஹொண்டாவும், யமஹாவும் ஓடுகிறது.

● ☐

தி. கருணாகரன் கெண்டன

கே: மேல்நாட்டு விஞ்ஞானத்திற்கும் நம்நாட்டு விஞ்ஞானத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப; மேல்நாட்டு விஞ்ஞானம் சந்திர லோகத்திற்கு மனிதனை அனுப்பிக்கொண்டிருக்கின்றது எமது நாட்டுகலப்பட விஞ்ஞானம் இயமலோகத்திற்கு மனிதனை அனுப்பிக் கொண்டிருக்கின்றது.

● ☐

த. எழிலரசி வாழைச்சேனை

கே: கடிகாரம் ஏன் டிக்டிக் என்கிறது,

ப: பொழுது செத்துக்கொண்டிருக்கிறது. என்று பறைகிறது

வி. உதயகுமார் களுவாஞ்சிகுடி

கே: பாலுணர்வுக்கும் போர் உணர்வுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப; பாலுணர்வு இனப்பெருக்கம் செய்யும் போர் உணர்வு இனச்சுருக்கம் செய்யும்.

● ☐

வி. அப்துல் ஹமீட் அக்கரைபற்று

கே: துப்பறியும் நாவல் எழுத்தாளர் பற்றி உமது கருத்து?

ப: மையம்தான் அவன் நாவலின் மையம்.

● ★

ஆ. க. செல்வநாயகம் இணுவில்

கே; அரசியல் வாதிகள் மேலானவர்களா?

ப: பெட்டைக்கோழி மேலானது... முட்டையிட்ட பின் தான் கொக்கரிக்கும்.

● ☐

து. கணேசு மன்னார்


கே; மகுடியாரே... விவசாயத்திற்கும், வர்த்தகத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: களை கிளைந்து கதிர் அறுவடை செய்வது விவசாயம் களை புகுத்தி காசு அறுவடை செய்வது வர்த்தகம்.

☐ ☐

ம. ராமசாமி மாத்தளை

கே: கணக்கப்பிள்ளை முதலாளிக்கு கணக்குவிட்டால்?



ப: முதலாளி குத்துவிளக்கில் கணக்குப் பார்ப்பார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்மனின் கருவிதைகள்

## சமாதி

உ
ய
ர்
ந்
த
கட்டிடங்கள்,
உயர்வுகாண —
ஏழைகள் மத்தியில்
உ
ய
ர்
ந்
த
கல்லறைகள்.

□

## சத்தியப்பிரமாணம்

அரிச்சந்திரன்
இன்னும் சாகவில்லை
உயிரோடு
வாழ்கின்றான்...
தந்தக் கோபுரத்தில் —
— இருந்து...
ஏழைகளுக்காக...
கதை வடித்துவிட்டு
'யாவும் கற்பனை'
என்று —
எழுதுபவனும் —
அரிச்சந்திரனே.

□

## வெற்றிடம்

அரசாங்க —
அலுவலகத்தில்
மூட்டைப்பூச்சிகளுக்கு
அலுவல் இல்லை —
காரணம்,
நாற்காலிகள் —
நாள்முழுதும்காலி.

□

## ஏக்கம்

ஐந்துநட்சத்திர
ஹோட்டலின்
அருகாமையில்
போகும்போது...
சொர்க்கம் —
மணத்தது.

□

## ஆலகாலம்

குறுமீன்
ஓட...
உறுமீன்
வருமளவும்
வாடியிருந்த
சீதனக் கொக்கு
கால்விறைப்பால்
காலனடி சேர்ந்தது.

□

## எரிவு

மனைவிமக்கள்
வயிறுகள்...
பசியால் —
பற்றிஎரிய...
ஒன்றும்படைக்காது
தான் படைத்த
நாவலில் —
மெய்மறந்து இருப்பவன்
ஒரு —
நீரோ மன்னன்

□

## நந்தன் சரித்திரம்

தரப்படுத்தல்
தீக்குளித்து —
பட்டதாரித் —
தீட்சைபெற்று
காரியாலயம்
தொழப் போகையில்
நந்திபோல்
வழிமறித்தது
No Vacancy
'போர்ட்'

## இனியது கேட்கின்...

அரிது... அரிது
மானிடராய்ப் —
பிறத்தல் அரிது.
— என
அன்றோர் புலவன்
இயம்பினன்,
இன்றோ
பெரிது பெரிது
மாநிலத்தில்
இடறோபெரிது...
காசினி கசக்கிறது...
நாசினி இனிக்கிறது.

□

## பதிபக்தி

பெற்றோருக்குத்
தெரியாது
மதுப்பிரியனைக்
காதலித்து
திருட்டுத்தனமாக
அவனுடன்
மோட்டார் சைக்கிளில்
ஓடுபவளும்
ஒரு
பதிவிரதை —
உடன்கட்டை
ஏறுபவள்

□


## பிறவிப் பயன்

கல்லானாலும்
கணவன்
புல்லானாலும்
புருஷன்
என்ற
தலைவிதியை
ஏற்பதற்கா —
பாரதியார்
பெண்ணாய்ப்பிறந்திட
மாதவம்
செய்திடவேண்டுமென
பாடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரச் சிரிப்பு



★ பிரசவ ஆஸ்பத்திரியில் வேலை செய்வதிலும் பார்க்க போஸ்ட் ஆபீஸில் வேலை பார்ப்பது மேல்

☐ ஏன்

★ போஸ்ட் ஆபீஸில் ஞாயிறு டிலிவரியில்லை... ஆஸ்பத்திரியில் ஞாயிறும் டிலிவரி இருக்கு.

☐ ☐

ஒரு: டாக்டர் எனக்கு குடும்பக் கட்டுப்பாட்டுசிகிச்சைசெய்ய வேணும்.

டாக்டர்: உன் பெயர் என்ன?

ஒரு: சந்தானகோபாலன்.



★ பிள்ளை வேணுமென்று செய்யாத மருந்தில்லை... 10,000 ரூபாவிற்கு மேல் செலவு

☐ நாங்கள் கருத்தடை செய்திட்டு 1000 ரூபா வாங்கியிட்டு வாறம்.



★ 'பிறவா ரெம் தாரும் பெம்மானே' என்ற தேவாரத்தை நெக்குருகிப் பாடினீர்களே! நானும் உருகிவிட்டேன்.

☐ குடும்பக்கட்டுப் பாட்டை ஆதரிக்கும் உலகில் வேறு எந்தவரத்தை வேண்டுவது.



ஒரு: உங்களுடைய 'ஒன்றே தெய்வம் ஒன்றேபிள்ளை என்ற குடும்பக் கட்டுப்பாட்டு பிரச்சார நாடகம் பிரமாதமாக இருந்தது.

மற்: மன்னிக்கவேணும் நான் அவசரமாகப் போகிறேன். ஆஸ்பத்திரியில்எனக்குஇரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கு

★ ★

☐ முரண்பாடு நிறைந்த உலகம் குடும்பக்கட்டுப்பாட்டுப் பிரச்சாரமும் வானொலியில் செய்கிறுங்கள்... சிறுவர் பிறந்த தின வாழ்த்தும் கூறுகிறுர்கள்.


பேச்சாளர்: அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது.

ஒரு: கருத்தடை செய்வதற்கு அரசாங்கம் 500 ரூபா லஞ்சம் கொடுக்கிறது. அப்புறம் என்னையா மானிடப்பிறவி அரிது என்று அலட்டுகிறீர்.



ஒரு: உத்தியோகமில்லை... விலைவாசி உயர்ந்து கொண்டு போகிறது... உங்க 1000ரூபா திருப்பித்தருவது ரொம்பக் சஷ்டமாயிருக்கு.

மற்: யோவ் நீயும் மனைவியும் குடும்பக் கட்டுப்பாட்டு சிகிச்சைசெய்து அரசாங்கம் தரும் 1000 ரூபாவையும் வாங்கித்தா.



ஒரு: பிள்ளையின் பிறந்ததினம் கொண்டாடுவதற்கு காசில்லையே.

மற்: கருத்தடை செய்து 1000 ரூபாவை வாங்கிக்கொண்டாடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிகளாரின் வாழ்க்கையில்



இலங்கையில் உள்ள எழுத்தாளர் இலவசமாக எழுதுவதை தனிநாயகம் அடிகள் வரவேற்றவர் அல்ல. இலங்கையில் வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகையொன்று அவரது பேட்டியை வெளியிட விரும்பியது. சஞ்சிகையின் சார்பாக ஒருவர் அவரைப் பேட்டிகண்டார். பேட்டி கொடுத்த அவர் சஞ்சிகை வெளியீட்டாளருடன் தொடர்பு கொண்டு தன்னைப் பேட்டி கண்டவருக்கு சன்மானம் வழங்கவேண்டும் என்று வற்புறுத்தி பெறுமதியான பணத்தைத் வாங்கிக்கொடுத்தார்.

★ ★

தனிநாயகம் அடிகளாருக்கு 15 மொழிகளில் பாண்டித்தியமும் 30 மொழிகளில் செயலாற்றும் திறமையும் இருந்தது. பாரிஸில் நடந்த தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிற்குச் சென்றிருந்தபோது மாநாட்டுக்கு வருகை தந்திருந்த பல்வேறு நாட்டு அறிஞர்களுடனும் அவர்கள் நாட்டு மொழிகளிலேயே சாரளமாக உரையாடினார். அவரது இந்தமொழிப் புலமையைக் கண்ட இலங்கைப் பிரமுகர் ஒருவர் தனிநாயகம் அடிகளுக்குப் பக்கத்தில் நின்று நானும் ஒரு இலங்கைத் தமிழன் என்பதில் பெருமை கொண்டேன் என்று கூறிப்பெருமைப் பட்டுக் கொண்டார்.

● ●

தனிநாயகம் அடிகள் மிகவும் இரக்க சிந்தையுள்ளவர். வெளிநாட்டு நண்பர்களிடம் இருந்து அன்பளிப்பாக நிதி உதவிகள் கிடைப்பதுண்டு. அதை அவர் தனக்கு நம்பிக்கையான சிலரிடம் கொடுத்து ஏழைகளுக்குக்கொடுக்கும்படி கூறுவார். அவர் இறக்கும்வரை அவரது இந்த தருமச் செயல் இரகசியமாகவே இருந்தது.

● ●

தனிநாயகம் அடிகளாரை ஒரு நடமாடும் நூல்நிலையம் என்று கூறுமளவிற்கு அவரிடம் நூலறிவு இருந்தது. அவரிடம் ஏராளமான புத்தகங்கள் இருந்தன. ஆனால் அவர் இறுதியாக வீரசிங்க மண்டபத்தில் நிகழ்த்திய வரலாற்றுச் சிறப்புமிக்க செல்வநாயகம் நினைவுச்சொற்பொழிவின்போது அவர் கைவசம் வேண்டிய நூல்கள் எதுவுமே இருக்கவில்லை, ஏனெனில் அவர்தமது புத்தகங்கள் அனைத்தையும் யாழ்வளாக நூல் நிலையத்துக்கு ஏற்கனவே அன்பளிப்புச் செய்துவிட்டிருந்தார்.

## சிந்தனைப் பொறிகள்

□ மேகங்களையே பார்த்துக் கொண்டு நாம் கட்டடத்தை மேலும் மேலும் உயரமாகக் கட்டிக்கொண்டே போகிறோம், கீழேயுள்ள மாபெரும் தூண்கள் போதிய அடிப்படை இல்லாமல் ஆடிக் கொண்டிருப்பதைப் பற்றி நாம் சிந்திப்பதே இல்லை.

—ஷில்லர்

□ **நல்ல** ஆலோசனை மட்டும் **சொல்பவன்** ஒரு **கையால் கட்டடம்** கட்டுகிறான், நல்ல **ஆலோசனையுடன் தன் நடத்தையையும்** மாதிரியாகக் **காட்டுபவன்** இருகைகளால் கட்டுகிறான், நல்ல முறையில் **கண்டித்து** விட்டுத் **தனது** தவறான **நடத்தையைக் காட்டுபவன்** ஒரு **கையால் கட்டியதை** மறுகையால் **உடைப்பவனாவான்.**

—பேக்கன்

□ **படகில் அமர்ந்து தண்ணீரில் பிரயாணம்செய்யும்பொழுது எந்தப் பாறையை அபாயகரமென்று கருதுகிறமே எந்தப் பாறையை எடுத்து எறிய விரும்புகிறோமோ, அதே பாறையைப் படகு உடைந்தால்** பற்றிக்கொள்**கிறோம்.**

**—பிரேம்சந்த்**

□ ஒரே சமயத்தில் மாபெரும் **காரியத்தைச்** சாதிப்பதற்காகக் **காத்துக்** கொண்டிருப்பவர்கள் ஒரு **காரியத்தையும் சாதிக்க மாட்டார்கள்.** எனவே **கையில் கிடைத்ததை நன்கு பயன்படுத்திக்** கொள், இல்லையெனில் **அதனால் உனக்கு** யாதொரு பலனும் ஏற்படாமல் **போய்** விடும்,

**—டாக்டர் ஜான்ஸன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MRS டாமோடிரன்



**Mr** டா: இப்போதையில் **கோபுரங்களைப்** பார்க்கும் போது நவராத்திரி கொலு ஞாபகம் வருது.

**Mrs** டா: வை டார்லிங்...

**Mr** டா: கோபுரத்தில் சிற்பங்களில்லை பொம்மைகள் தான் இருக்கு.




அணுக்குண்டு: விஞ்ஞான விவசாயிகள் அறிவெனும் வயலில் அறுவடை செய்யும் நச்சுக்கனி.

குளியலறை: சங்கீதம் படியாதவர்கள் கச்சேரி செய்யும் அரங்கு.

துப்பாக்கி: இயமனின் புல்லாங்குழல்

தந்திக்கம்பம்: வேகமாகச் செல்லும் பிரேக் இல்லா வாகனங்களை நிறுத்த உதவும் பிரேக்.

ஸ்கூட்டர்: ரோசமில்லா வாகனம், உதை வாங்கியே நகரும்.

விலைவாசி: நம் அரசியல் ஞானிகளால் விண்வெளிக்கு ஏற்றி இறக்கத்தெரியாது தவிக்கும் ஏவுகணை

# மனமார


# வாழ்த்துகிறேம்

வர்த்தகப் பிரமுகரும், சிரித்திரன் வளர்ச்சியில் ஆழ்ந்த அக்கறை கொண்டவருமான

**திரு க. கனகசபை தம்பதிகளின்**
**புதல்வி செல்வி பாமதிக்கும்**
**திரு தியாகராசா தம்பதிகளின்**
**செல்வன் ரவீந்திரனுக்கும்**

கடந்த **29-8-80** அன்று திருமணம் நடைபெற்றது.

மணமக்கள் சிரிப்பும் சிறப்புமாக வாழ சிரித்திரன் வாழ்த்துகிறுன்.



- அறிவாளி தன்வாயை இதயத்தில் வைத்திருக்கிறுன். குடிகாரன் தன் இதயத்தை வாயில் வைத் வைத்திருக்கிறுன்,
- ஏழைகள் தேடுவதிலும், செல்வன் காப்பதிலும், நல்லவன் கற்பதிலும் களைத்திருக்கிறுன்.
- ஏழைகளுக்குக் கொடுத்தது, கடவுளுக்குக் கொடுத்ததாகும்.
- வறுமை வாயிலுக்குள் வந்துவிட்டால், அன்பு சன்னல் வழியே போய்விடும்.
- வாழ்க்கை என்பது ஓர் அரங்கு, அங்கு மிகப்பெரிய அயோக்கியர்கள் தான்மிகச் சிறந்த இருக்கைகளில் அமர்ந்திருக்கிறுர்கள்.
- அறிவாளிகளின் அறிவு அவர்களின் வயிற்றை நிரப்புவதில்லை.
- நான் பிறந்ததும் அழுதேன் ஏன் அழுதேன் என்பதை, கழியும் ஒவ்வொரு நாளும் காட்டிக்கொண்டே செல்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● நாடக நோக்கு.

# தாலிக்கொடி

சமீபத்தில் யாழ்ப்பாணம் கலாஜோதி ஒன்றியத்தினுல் நல்லூர்த்திருவிழாவை யொட்டி மேற்படி ஒன்றியத் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற கலைவிழாவில் 'தாலிக்கொடி' என்னும் சமூக நாடகம் மேடையேற் றப்பட்டது,

இன்று நம்மவரிடையே காணப்படும் வெளிநாட்டுப் பிரயாண மோகம், இளைஞர் யுவதிகளின் பொறுப்பில் லாத போக்கு இவற்ருல் ஏற்படும் குடும்பக் குழப் பங்கள், ஏமாற்று, மோசடிகள், லஞ்சம், இப்படியான நடைமுறைப் பிரச்சனைகளை சுவாரஸ்யமாகத் தொட்டுச் செல்கிறது நாடகத்தின் கதை.

ஜனரஞ்சகமான சம்பவங்கள் மூலம். கதையமைப்பை பார்வையாளர்களைக் கவரும் விதத்தில் தயாரித்திருந்த துடன் இந்நாடகத்தில் இன்ஸ்பெக்டராகத் தோன்றி மிக இயல்பாகவும் நடித்தார் திரு. அரசரட்ணம்.

பெண்கள் பாத்திரத்தில் நடித்த நா. கேகயலிங்கம், எஸ். சபேசன் ஆகியோரின் நடிப்புக் குறிப்பிடத்தக்கது

மற்றும் எஸ். நவரத்தினம், சே, இதயலிங்கம், பூ. சசி குமார், க. அன்பழகன் ஆகியோரின் நடிப்பிலும் அவர் களின் ஆர்வம் வெளிப்பட்டது,

செகிட்டு வேலைக்காரனுக நடித்த நர்த்தனலிங்கம் ரசி கர் மத்தியில் சிரிப்பலைகளை ஏற்படுத்திய வண்ணம் நடித்தார்,

மொத்தத்தில் சுவையான பொழுதுபோக்கு நாடகத்தை பார்த்த உணர்வினை ஏற்படுத்திய ஒன்றியத்தினரைப் பாராட்டவே வேண்டும்.

# BAR

BAR என்ற ஆங்கிலச் சொல்லு மதுபானக்கடை யைக் குறிப்பதாகும். ஆனுல் BAR என்ற அந்தச் சொல்லிற்கு தமிழில் தடை என்று பொருள்படும். எனவே அந்த மதுபானக் கடைகளில் விற்கப்படுகின்ற குடி வகைகள் ஒவ்வொன்றும் மனிதனை சொர்க்கத்திற் குப் போகத் தடையாக இருப்பதுடன் அதுவே அவனை நரகத்திற்குப் போக திறவு கோலாகவும் இருக்கிறது.

---

● குழந்தைகள் வாரம் கொண்டாடு வதற்கு உங்க மண்டபம் தேவை.

□ மன்னிக்கவேணும்... குடும்பக் கட்டுப் பாட்டுப் பிரச்சாரத்திற்கு மண்டபம் புக் பண்ணியிட்டாங்க.

---

# விபத்து!

விமானப் 'பைலட்' பிரயாணிகளைப்பார்த்து ''விமானத்தில் பழுது ஏற்பட்டுவிட்டது. விபத்து எந் நேரமும் ஏற்படலாம், உங்க சமய ரீதியாக ஏதும் செய்தால் நல்லது'' எனக்கூறினுர். உடன் ஒரு சமய குரு எழுந்து உண்டியலைக் குலுக்கினுர் பிரயாணிகள் முன்.

---

அந்தக் காலத்தில் புல்லானுலும் புருஷன்
இந்தக் காலத்தில் புருஷனுனுலும் 'பில்'

—'தங்கச்சியம்மா நாவலில்' நந்தி


---

24ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டிருந்த மூத்ததங்கச்சி விக்கிவிக்கி அழுகிருள்....

பெரியண்ணனின் கண்கள் கலங்கி இதயம் பொருமுகிறது. நிரந்தரமான வேலை ஒன்று அவ னுக்கு இல்லாததால் நான் காத லித்த வளேயே இழந்துவிட வேண்டி இருக்கும் துர்ப்பாக்கிய நிலையை எண்ணி பெரியண்ணன் கண்கள் கண்ணீர் வடிக்கின்றன...

கருமேகங்கள் சந்திரனை மறைத்துக் கொண்டதனுல் முற் றத்தில் நிலவு பொழியவில்லை... கற்பனையே



★ மழலைச் சொல் இனிது என்ற காலம் மலையேறிவிட்டது? இப்போ காசுதான் இனிது.

□ ஏன்?

★ கருத்தடை செய்து அரசாங் கம் கொடுக்கும் 1000 ரூபா வாங்குகிருர்களே?

# அரிச் சுவட்டில்

அவர்களும்
அரிச்சந்திரர்கள்தான்
ஆனுல்...
மனைவியை
மக்களை
விற்காகர்த
பண்பாளர்கள்
தங்களையே
விற்கிருர்கள்
சீதனம் என்ற
விசுவா மித்திரனுக்காக

—அகளங்கன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனச் ● ● சிரிப்பு

அன்பான அப்பா,

பொம்பிளையோடு நீங்களோ அவளுடைய பெற்றோரோ வர வேண்டாம். ஒரு புரோக்கரை மட்டும் அனுப்பிவிடவும். ஏனென்றால் இங்குள்ள புரோக்கர்மாருக்குச் சீதனம் எழுதத்தெரியாது. சீதனமென்றால் என்னவென்று கேட்கினம்.

இப்படிக்கு
மகன் கருங்கல்வராயன்
லண்டன்




● என்ன, கட்டுநாயக்காவிலை மாப்பிளை வந்திறங்கியதும் கல்யாண எழுத்தை முடிச்சனளாம்.

☐ மாப்பிளையை யாழ்ப்பாணம் வரவிட்டிருந்தால் சீதனரேற்றைக் கூட்டியிருந்திருப்பார் அதனால்தான்.



யாழ்வாசி: வ்என்ன திடீரென்று கொழும்பைவிட்டு இங்கை வந்து உலாவுகிறீர்கள்?

கொழும்புவாசி: மகன் ஒருவன் வேலையாய் விட்டான் சீதன நிலைவரத்தை அறிஞ்சுபோக வந்தனான்.





☐ என்ன சீதனத்தில் புதுமாதிரியான நிபந்தனை போட்டாயாமே?

● ஆமா, பெண் பிள்ளைகள் பிறந்தால் அவற்றுக்கும் மாமனார்தான் சீதனம் கொடுக்க வேண்டுமென்று மட்டும் கேட்டேன்.

● என்னடா சீதனம் பெரிசா வேண்டுமென்று நாயா அலைஞ்சாய், இப்ப!

☐ இப்பவும் சீதனம் தேடித்தான் பேயா அலையிறன்! எனக்கு எல்லாம் பெண் பிள்ளைகள்.






● ஏன் காணிகளெல்லாமே பெண்கள் பெயரில் இருக்கிறது?

☐ சீதனம் பெண்கள் பேரில் எழுதப்படுவதால்...!

☐ உந்த ஊர்வலத்தில் வாற மாப்பிள்ளையும் யாழ்ப்பாணத்தில் ஒரு சாதனை செய்தவர்.

● என்ன சாதனை

☐ சீதனம் வாங்காமல் கலியாணம் செய்தவர்.



பிரமா: உன்னை அழகானவளாகவும், பண்பானவளாகவும். ஒரு ஏழையின் வீட்டில் யாழ்ப்பாணத்தில் பிறக்கும்படி படைக்கின்றேன்.

பெண்: வேண்டாம் பிரபு! யாழ்ப்பாணத்தில் பிறப்பில் என்னைப் பணக்காரியாக மட்டும் பிறக்க வழிசெய்யுங்கள் அழகும் பண்பும் வேண்டாம்!

சி. பற்குணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தர்மராஜா

அன்னப் பறவையைப் போல, உலகைவிட்டு மறைந்தும் உள்ளத்திலே மறையாத ஒரு அற்புதமான பறவை அன்றில் பறவை. அன்றில் பறவையைப் பற்றி தமிழ் இலக்கியங்களில் அனேக இடங்களில் வருகின்றது.

'இணைபிரியா' அன்றில் பறவைகள் எப்பொழுதும் தமது துணையைவிட்டுப் பிரியாமல்ச் சேர்ந்தே இருக்குமாம் இதனால் காதலன், காதலி, கணவன், மனைவி. ஆகியோரின் இணைபிரியா இன்ப அன்பு ஒற்றுமைக்கு இப்பறவையே உதாரணமாயிற்று.

அன்றில் பறவையில் இரு பறவையில் ஒரு பறவை இறந்தால் மற்றப்பறவை அதாவது அதன்துணை மிக அதிகமான அளவு துயரில்வாடி உயிரிழக்கும் என்பது இலக்கியங்களில் காணக்கிடக்கின்றது. ''சோடிழந்த அன்றிலைப்போல்த்துயரமானேன்.'' என்ற பாடல் வரிகள் 'சோடி'யை இழந்த அன்றில் படும் அவலமே உலகில் மிகப்பெரிய கவலை என்ற பொருளில் பாடப்பட்டதே.

இந்த அன்றில் பறவையில் இன்னுமொரு சிறப்பு உண்டு. மிகவும் அதிசயமான இச்சிறப்புப்பற்றி நளவெண்பா என்னும் நூலிலே வெண்பாவிற் புகழேந்தி'' எனப் போற்றப்பட்ட புகழேந்திப் புலவர் கூறுகின்றார்.

அன்றில்ப்பறவை சோடியாகப் படுத்துறங்கும் போது ஒரு கண்ணை மட்டும் மூடி நித்திரைசெய்து கொண்டு மறு கண்ணால்த் தனது துணையைப் பார்த்துக் கொள்ளுமாம். அதனது கண்ணுக்குள் எப்பொழுதும் அதனது 'துணை இருக்க வேண்டும் என்று விருப்பம் போலும். அல்லது சந்தேகமோ? எது எப்படியோ கணநேரமும் துணையை விட்டுப் பிரியாமல் உறங்கும்போது கூட ஒரு கண்ணால் தன் துணையைப் பார்த்து மகிழ்ந்து உறங்கும் அன்றில் பறவை ஓர் அதிசயக் காதல்ப் பறவையே.

'அன்றில் ஒருகண் துயின்றொருகண் ஆர்வத்தால்
இன்துணைமேல் வைத்துறங்கும் என்னுஞ்சொல்—இன்று
தவிர்ந்ததே போலரற்றிச் சாம்புகின்றி போதே
அவிழ்ந்ததே கண்ணீர் அவட்கு.''

● நமக்குத் தெரிந்தது எது? தெரியாதது எது? என்பதை அறிந்து கொள்வதே உண்மையான அறிவு.

— சீனஞானி கன்ஃபியூஷியஸ்



☐ உங்கள் மகன் தொடர்ந்து கோயில் வந்தாரே...

● கோயிலில் காதல் ஏற்பட்டபடியால் இப்போ தொடர்ந்து காதலி வீடு போகிறான்.

சஹானாமோகன்

## விதவைகள்

வாழ்க்கைப் பேதுருவில்
ஏறமுடியாத
வெண்துகில்ப் பறவைகள்;
காமன்பண்டிகையில்
மன்மதராஜனின்
கைக்குவரமுடியாத
அக்கினிமலர்கள்
விதிஇராவணனால்
சிறைவைக்கப்பட்ட
இராமாஜபமிடும்
பதிவிரதை
அசோகவனத்துச்சீதைகள்
ஆதிஷேஷன் திமிறலில்
துன்பவிசிகுடாவில்
எறியப்பட்ட
நீந்தத் தெரியாத மீன்கள்,
கல்யாணமாலைகளில்
சேர்க்கமுடியாத
உதிரிப்பூக்கள்
வாழ்வுத்தடங்கள்
நிலைமாறிப்போனதால்
இவர்கள்—
திசைமாறிய பறவைகள்!

## கோயில்

இளநெஞ்சங்களின்
அந்தப்புரம்
வாழ்க்கைக் கூட்டுத்தாபனத்தின்
நேர்முகப்பரீட்சை
அலுவலகம்,

முல்லை அமுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டுள்ள
பெண் விவாகரத்துக்கடிதம் எழுதினால்
எப்படி இருக்கும்?
இதோ இப்படியும் இருக்கலாம்....

# ஒரு விவாகரத்துக் கடிதம்

வெமலர் செல்லத்துரை

கிறீஸ்து சகாப்தம்
1980ம் ஆண்டு சித்திரை
1ம் திகதி

கௌரவதாசனுக்கு...

கீழைத்தேசங்களுக்கு வர்த்தக நோக்கமாக ஆங்கிலேயர் வந்தனர், போர்த்துக்கேயர் வந்தனர். போர்த்துக்கேடர் மேலைத்தேசங்களிலிருந்து கீழைத் தேசத்துக்கு வரும் கடற்பாதையைக் கண்டுபிடித்தனர். இப்போதைய அரசு மகாவலிகங்கைக்கு மார்க்கம் தேடுகின்றது ஆனால் நீர் உமது மாஜிக்காதலியின் கண்ணீருக்குக் கால்வாய் போட்டவராகின்றீர்! நளன் தமயந்தியை நள்ளிரவில் நடுக்கானகத்தே விட்டுப்போனது பற்றிய இலக்கிய ஆதாரம் இன்னும் என்னால் ஆராயப்படவில்லை. அதற்கிடையில் நடுப்பகலில் நடுவீட்டில் இருக்கும் படியாக அவளைவிட்டு நீர்பிரிந்து போனமைக்கான காரணங்கள் நானிலையாவது தகுந்த வரலாற்றுதாரங்களோடு எமது சுவடிப்பாதுகாப்பு நிறுவனத்தில் ஒப்படைக்குமாறு கேட்கிறேன், ஆங்கிலேயர் வரவால் இலங்கையில் ரேட்டுக்கள், தெருக்கள், வீதிகள், பாதைகள் எல்லாம் போடப்பட்டன, ஆனால் உமது வரவால் ஒரு பெண்ணின் வாழ்க்கைப்பாதை மூடப்பட்டு விட்டது,

அகில உலகத்தையும் திட்டமிட்டு வெற்றிவாகை சூடும் ஆங்கிலேயர் வரலாற்றிலே ஆள்பதி நோர்த் கண்டிமீது படையெடுத்துக் கண்டதோல்வி ஒருவெள்ளைச் சேலையில் கறுப்புப்புள்ளி விழுந்தாற் போன்றதாம் அதேபோல இருபதாம் நூற்றாண்டின் எட்டாம் தசாப்தத்திலே நான்கண்ட தோல்வியும் மிகப்பெரியதே ஆண்களின் தெரிவையொட்டி 'அழுகிய ஆப்பிள்களுக்குள்ளே எதைத்தான் தெரிவு செய்வது' என எண்ணியித்தனை காலத்தையும் அகழ்வாராய்விலும் தொல்பொருள்களை மதிப்பிடுவதிலும் கடத்திவந்த நான்... அதாவது கல்லிலும், மண்ணிலும், இலக்கியங்களிலும் மலைகளிலும், குகைகளிலும், கட்டிடங்களிலும், கடந்த கால மனிதனின் சிந்தனைகளையும் தேடிப்பிடித்த நான் கேவலம் சமகாலத்தில் வாழும் ஒருவரைப்பற்றி என் திருமணப் பதிவின்முன்பே தெரிந்து கொள்ளமுடியாமற் போனது மிகவும் அவமானமாகும். இது பற்றியாரும் சரித்திராசிரியர்கள் அறிந்தால் ஒருசரித்திர விபத்து என்று கூறுவர். உங்கள் வரலாற்றை அறிய உதவும் பலவகை மூலாதாரங்களில் சிலவற்றை உங்கள் மாஜிக் காதலி எனக்குக் காண்பித்தாள். அவற்றுள் முதன்மையானது அவளது இதய இடிபாடுகளுக்குள்ளே காணப்படும் உங்கள் சிலையகம்... அவள் தன் புராதன இதய நகரிலே கட்டியிருந்த உங்களது சிலையகமும்கூட அனுராதபுரக் காலத்துக் கட்டிடக்கலையில் பயன்படுத்தப் பட்டிருக்கும் பதினெழு அங்குல நீளமான செங்கற்களை ஒவ்வொன்றாக அடுக்கிக் கட்டப்பட்டதென்பதை அக்கட்டடத்தின் பூச்சுக்கொட்டுப்பட்ட இடங்களைக் கவனித்து நான் முடிவுக்குவந்தேன். அந்த உங்கள் சிலைகளிம்பேறிக் காணப்பட்டாலும்கூட நன்றாக ஆராய்ந்து பார்த்தபோது அதுஒரு வெண்கலக்காலச் சிலை என்பது தெரிந்தது. சிலையில் திராவிடக் கலையம்சம்தான் மிளிர்ந்தது. நான் சிலையின் ஆடையணிகலன்களைப் பார்த்தபடி அவள் சொன்ன கதையைக் கேட்டேன். வேஷ்டி நாஷனலுடன் காணப்பட்ட உங்களது சிலையை நீங்களே இனம் காணத்தவறிவிட்டீர்களாம். உங்களைக் காதலிப்பதாக சொல்லிக்கொண்டு அவள் வேறுயாரோ 18ம் நூற்றாண்டுப் பழைய தலைமுறை ஆசாமியை நினைக்கிறாள் என்று முடிவுக்கு வந்து விட்டீர்களாம். அதுதான் நீங்கள் அவளைப் பிரிந்தமைக்குக் காரணமாம் என அவள் சொன்னாள். ஆனால் நான் அதை ஏற்கவில்லை. சிலையின் ஆடைகளை வைத்துப் பார்த்தபோது அதுஒரு சுதந்திர மனிதனுடைய ஆடையணியல்ல என்பதைப் புரிந்துகொண்டேன். அதாவது அந்நியர்க்கடிப்பட முந்திய மனிதன், தலையில் குடுமிவைத்திருந்தான் அவனுக்கு நாஷனல் போடும் பழக்கம் இல்லை எனவே கூறவேண்டும் ஆனால் அந்நியரிடமிருந்து தப்பிய நம் நாட்டவன் வேட்டியைக் கட்டமாட்டான். ஆனபடியால் அந்தச் சிலையின் உடைநடை பாவனைகளைவைத்து உங்களைப்பற்றி தகுந்த ஆதாரத்தோடு முடிவுக்கு வந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன். அந்நியராட்சியின்கீழ் சுதந்திரத்துக்கு முற்பட்ட 1945ம் ஆண்டளவில் வாழ்ந்த அடிமையின் ஆடை அதாவது இப்போ ும் யார்யாருக்கோ அடங்கிவாழும் அந்த மனிதன் ஒரு அடிமை. அதுதான் தாயே! தமிழ் மகளே! உன்னை மறந்தான் தன்வழிப்போனான்'' என்று ஆறுதல் கூறினேன்.

அதன் பின்னர் பிரகாஷ் புகைப்பட ஓவியர் உங்களையும் அவளையும் சேர்த்துக்கீறிக் கொடுத்த கி. பி. 1968ம் ஆண்டு கிட்டத்தட்டச் சரியானதான காலப் பகுதியின் ஓவியத்தைப் பார்வையிட்டேன். அந்த ஓவியத்தின் மை, மண் நிறமும்... மண்நிற மஞ்சளும் கலந்து போயிருந்தது. புகைரதத்தின் நான்கு விழிம்புகளும் மை உதிர்ந்து போய் விட்டன. புகைப்படத்துக்குப் பயன்படுத்திய தாளும் தரமானதாய் இருக்கவில்லை. அவற்றைக் கொண்டு அத்தகைய புகைப்படமை, தாள் போன்ற ஆடம்பரப் பொருட்களின் இறக்குமதி அக்காலகட்டத்திலே கட்டுப்படுத்தப் பட்டிருக்கவேண்டும் என்று முடிவுக்கு வரவேண்டியதாயிருக்கின்றது. இதன் பின்னர் இரப்பர் முத்திரை ஒன்றைக் காட்டினாள், அது உங்கள் கைகளால் செய்யப்பட்டது. அதிலே எழுதியிருந்த ''கண்மணி உண்மைக்காதல்... உத்தமசீலன்... என்ற சொற்களைக் கவனித்தேன். நான் மட்டுமல்லாமல் ''எப்பிக்கிராபி'' (எழுத்தாராய்வில்) வல்லுநரான என் உதவியாளர் திரு மகா சித்திரபுத்திரனும் அவ்எழுத்துக்களை ஆராய்ந்தார். அவர் எழுத்துத்துறையிலே எம்மூரில் புகழ்வாய்ந்தவர். எம்மூரில் அவருடைய காதல் கடிதம் படிக்காத ஒருபெண் இருக்கவே மாட்டாள். அந்தச் சொற்களில் உள்ள எழுத்துக்கள் இக்காலத்தமிழ் எழுத்துக்கள் போலவும் அல்லாமல் தொடக்க காலத்தமிழ் எழுத்தைப் போலவுமல்லாமல் ஆதிப்பிராமி எழுத்துக்களைப் போலத்தான் எனக்குத் தெரிந்தன. திரு மகாசித்திர புத்திரனும் ஆணித்தரமாக அதே கருத்தைத்தான் சொன்னார். அதிலிருந்து இன்னொன்றையும் நான் கண்டுபிடித்தேன். அதை நீங்கள் எழுதும்போதே அந்தக்காதல் காலம் கடந்துபோய் விட்டதாயிருக்க வேண்டும்.

அதன் பின்னர் உங்கள் கடித இலக்கியங்களை வரலாற்றுச் சான்றாக எடுத்து ஆராய்ந்தேன். வசன நடைகைவந்த வல்லாளர் ஆறுமுக நாவலர் படித்தால் தலை குனியக் கூடிய உரையாயிருந்தது. அத்துடன் அதுவரலாறு கூறும் விஷயத்தில் மகாவம்சத்தையே தோற்கடித்துவிடும் போலிருந்தது. மகாவம்சம் தனக்கு எண்ணூறு ஆண்டுக்கு முற்பட்ட வரலாற்றை மட்டும் சொல்கின்றது. நீங்களோ 1500 ஆண்டுசட்கு முற்பட்ட உங்கள் முற்சந்ததியாரின் புகழை யெல்லாம் பாடியிருக்கின்றீர்கள். என்னைப்போல ஒருத்தி யென்றால் கதை வேறாகியிருக்கும். எல்லாமே உண்மைக்கு மாறானதென்று முழுவதையும் ஒரேயடியாக ஒதுக்கியிருப்பேன். நீங்கள் திருப்பிக் கேள்வி கேட்கலாம்தான். ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை என்மது போல்தான் இவ்விசயமும் நடக்கிறது. ஆனால் ஒரு வரலாற்றாதாரமாக எடுக்கப்பட வேண்டிய இலக்கியம் பக்கச் சார்பாயும், உண்மைக்கு மாறாயும் இல்லாமல் சம காலநிகழ்வு பற்றியதாயுமிருக்கவேண்டும். முன்னர் நடந்து முடிந்ததைக் கற்பனையில் கண்டு கொல்வது வரலாற்று நூலல்ல.

எது எப்படியாயினும் உங்கள் சிற்பத்திறனுக்குச் சான்றாக நிற்கும் உங்கள் மகனைப் பார்த்து வியந்தேன். உங்கள் பழைய வரலாறு நிரூபணமாகி விட்டது. ஆமாம்! நீங்கள் ஒருதிறமையான சிற்பி!

நாமிருவரும் திருமணப் பதிவுசெய்ய நம்முன்னோர் நல்லநாள் பார்த்தனர். நம்முன்னோர் இற்றைக்குச்சில பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சோதிடக்கலையிலும் வான நூல் அறிவிலும் வல்லோராயிருந்தமையை நினைவு கூறுமுகமாக நாம் இதைச் செய்கிறோம். அந்நன்நாளிலே நாமிருவரும் திருமணப்பதிவு செய்தோம். இது எமது நாட்டில் ஆங்கிலேயர் வரவால் ஏற்பட்ட ஒரு வரலாற்றுத்தாக்கம் முன்னர் ஒருவனோடு இருமனைவி வாழலாம் ஆனால் டச்சியர் வரலாற்றுப் பாதிப்புகளினால் அப்படியான நிலைபரம் இப்போதில்லை. ஆகவே நீங்கள் உங்களுக்கு வசதிப்பட்ட நேரத்தைக் குறிப்பிட்டெழுதுங்கள். நாங்களிருவரும் மீண்டும் சந்திப்போம் நியாயஸ்தலத்திலே.

விவாகரத்து சம்பந்தமாக வெட்டொன்று துண்டிரண்டாக இருப்பதுதான் எப்போதும் எனக்குப் பிடிக்கும். போர்த்துக்கேயரைத் துரத்த ஒல்லாந்தரைக் கூப்பிட்ட ஸ்ரீ விக்ரமராஜசிங்கனை ''மிளகாயைக் கொடுத்து இஞ்சி வாங்கியவன்'' என வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றார்கள். பாவம் நீங்கள்... அவளை அனுப்பி என்னைக் கூப்பிட்டதை எவ்வாறு வர்ணிப்போம்.

விடைபெற விரும்பும்
சுதந்திரா



சோதிடர்; எப்பொழுது உனக்கும் அந்தப் பெண்ணிற்கும் காதல் ஏற்பட்டது.
வாலிபன்: கோயிலில் 8ம் திருவிழாவன்று
சோதிடர்: 8 எண் உனக்கு ஜென்மப் பகை காதல் நிறைவேறாதே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்கள் இன்று இருந்தால்

**சகுந்தலை:**
துஷயந்தன்மீது ஜீவனும்ஸ வழக்குப் போட்டிருப்பாள்

**தமயந்தி:**
கானகத்தில் காரிருளில் கைவிட்டுப்போன நளனை விவாகரத்துச் செய்துவிட்டு சுயம்வரம் நடத்தியிருப்பாள்,

**பாஞ்சாலி:**
தன்னைப்பணயப் பொருளாக வைத்துச் சூதாடிய பாண்டவர் மீது மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் பிரகாரம் வழக்குப் போட்டிருப்பாள்

**கண்ணகி:**
கோவலன் தனது நகைகளை வாங்கிச்சென்று மாதவிக்குக் கொடுத்துவிடுவான் என்ற பயத்தில் நகைகளை வங்கியில் பாதுகாப்பாக வைத்திருந்திருப்பாள்

**கம்பர்:**
காவியம் பாட காவியநாயகர்கள் இல்லாத காரணத்தால் கதாநாயகர்களை புகழ்ந்து சினிமாவுக்குப் பாடல் எழுதிப் பிழைத்துக் கொள்வார்

**ரவிவர்மா:**
சினிமா பானர்கள், விளம்பரப் பலகைகள் எழுதிப் பிழைப்பார்

**அருச்சுணன்:**
தனது வில்லாகிய காண்டீபத்தை வில்லுப்பாட்டுக் கருவியாக்கி ஒருகோஷ்டி அமைத்துக் கொள்வார்

**நாரதர்:**
தனது பழம்பெரும் தம்புராவை வீசிவிட்டு 'கிற்றாரு'ம் கையுமாக 'பொப்'பாடல் பாடித்திரிவார்

**குசேலர்:**
குடும்பக் கட்டுப்பாட்டு இலாகா அதிகாரியாக கடமை புரிவார்

**தசரதர்:**
அந்நிய நாட்டில் பிழைக்கப் போயிருக்கும் மகனை நினைத்து புத்திரசோகத்தால் கண்ணீர் வடிப்பார்

**மாதவி**
இலெக்ரிக் வீணையில் கானல்வரி பாடுவாள்

**இராமன்**
இஸ்ரேலியரின் உதவியுடன் சீதையை அசோக வனத்திலிருந்து மீட்டிருப்பான்

**நக்கீரன்**
குறுக்கு விசாரணையில் கைதேர்ந்த வழக்குரைஞராக இருப்பார்

# சிரித்திரு

தகப்பன்; அவன் 'மோட்டோர் பைக்' ஓடும் வேகத்தில் அற்ப நாளே உயிருடன் இருப்பான் அப்படியிருக்க அவனை ஏன் கல்யாணம் செய்ய அடம் பிடிக்கிறாய்?

மகள்: அவர் ஒருலட்ச ரூபாய்க்கு தன்னை 'இன்ஸுர' பண்ணி இருக்கிறார் அப்பா

● ●

பேச்சாளர்; பிரயாணிகளே! திருகாயவரதன் தனது பத்து வருடசேவையில் பத்து விபத்துக்களுக்குப் பொறுப்பாக இருந்த போதும் விபத்தில் அகப்பட்டவர்கள் கை, கால் இழந்தனரேயன்றி யாரும் கொல்லப்படவில்லை அந்த நன்றிக்காக உங்கள் சார்பில் இப்பொன்னுடையைப் போர்த்துகின்றேன்.

● ●

1ம் வியாபாரி; லாபம் கொட்டும் வியாபாரம் தொடங்கியிருக்கின்றாயாமே?

2ம் வியாபாரி: பொய்க்கால் பொய்க்கை வியாபாரம் வரவர லாபம் ஏறுது

● ●

தரகர்; உங்களுக்கு ஏன் 'டிறைவர்' மாப்பிளைதான் வேண்டுமென்று அடம்பிடிக்கிறீர்கள்?

மற்: நான் சனத்தொகைக் கட்டுப்பாட்டு இலாகாவில்வேலை செய்யிறன். என்ரை உத்தியோகத்துக்குஒத்துவரக்கூடிய மாப்பிளை இப்போதைக்கு 'டிறைவர்'மார் தான்

பற்குணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றிலிருந்து...

# கடதாசி வந்திருக்கு...

● கங்குலன்

"சுனம் சிரஞ்சீவி எனதுஇரு கண்ணிலும் அதிக பிரயமுள்ள மகன் கந்தசாமிக்கு யாஞகிய தந்தை முனியாண்டி கங்காணி எழுதிக்கொள்வது என்னவென்ருல் இப்பவும் இவ்விடம் நாங்கள் யாபேர்களும் நல்லசுகம். இவ்வாறே போல் அவ்விடம் உன்னுடைய சுகம், லயத்தில் உள்ள மற்றவர்கள் சுகம், மேட்டு லயத்து கந்தையா கங்காணி குடும்பம் சுகம், தோட்டத்து ஆளுகள் சுகம் எல்லாவற்றையும் பார்க்கவும் கேட்கவும் மிகவும் ஆவலாய் இருக்கின்ருேம்.

மகன் அறிவது இங்கு ஊருல எங்க நெலமைய ஒனக்கு தெரிவிக்கனுமுன்னு இதை எழுதுறேன்.

புனர்வாழ்வுன்னு குடும்ப கார்டு எழுதிக்கிட்டு வந்தோமில்லியா? மொதமொத ராமேஸ்வரத்திலே இறங்கி மண்டபம் கேம்புல ஒரு கெழம இருந்தோம் அப்புறம் அங்கேயிருந்து ஒரு கார்ப்பரேசன் லொறியில எங்கள கொண்டுபோய் நெய்வேலிங் கிற இடத்துலவுட்டாங்க. அங்கே நெலக்கரி தோண்டுற வேலே ஒரு நாளேக்கு ஒரு அடிதான் தோண்டனும். ஆனு சரியான கஷ்டம். நெய்வேலில உஷ்ணம் தாங்க ஏலாம தெனம் பல பேர் செத்துப் பொழைக்கிருங்க.

காலம் காலமா சிலோன்ல குளிர்ச்சியான - இடத்துல இருந்துவந்திட்டு, அந்த உஷ்ணத்துல இருக்க ஏலாதுன்னுட்டு தேயில தோட்டத்துல வேல செய்யலாமுனு நெனச்சு நீலகிரி பக்கமா போனேம்.

நீலகிரிக்குப் போனவுடனே ஒரு மாசத்துல ஒன் அம்மாவுக்கு ஆஸ்மா நோய்வந்து கூடலூர் ஆஸ்பத்திரியில நிப்பாட்டி, நான் ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் அலேயா அலேஞ்சு எனக்கும் ஒடம்புக்கு சரிப்பட்டு வரல்ல. ஒன் அம்மா கரச்சல்னல நம்ம காணியைப் பார்த்துக்கிட்டு அங்கேயே போய் இருப்போமுனு ஒரு மாசத்துக்கு முந்துதான் தஞ்சாவூருக்கு வந்தோம்.

ஏற்கனவே புனர்வாழ்வு 'லோன்' காசில ராமேஸ்வரம் மண்டபம் கேம்ல எடுத்த மூவாயிரம் ரூபா போகமீதி ரெண்டாயிரத்தையும் தஞ்சாவூர் கலெக்டர் ஆபீஸ்லதான் எடுக்கணும் எங்கபேருக்கும் அடுத்தடுத்து நோய் நோயின்னு இருந்தகாசெல்லாம் கரைஞ்சு போச்சு.

மீதி ரெண்டாயிரத்தையும் எடுக்கிறதுக்கு கலெக்டர் ஆபிஸ் பியோன்ல இருந்து கலெக்டர் வரை 'மாமூல்' கொடுத்து கடைசியில அஞ்னூரோ ஆறுநூரோ தான் கையில ரொக்கமா கெடைசிச்சு.

நமக்குனு இருந்த எழுவது குழி சவுக்குத் தோப்புல, இவ்வளவு காலமும் சவுக்கு போட்டு வித்து தின்னுகிட்டு இருந்தாங்க நாங்க சிலோன்ல இருக்கையில ஊருக்கு வந்து சேருங்க, ஊருக்கு வந்து சேருங்கன்னு, கடதாசி மேல கடுதாசி போடுவானுகளே ஓஞ்சித்தப்பன், பெரியப்பன் எல்லாம் இங்கவந்து பாத்தாத்தான் தெரியுது மாமென், மச்சான், சித்தப்பன் பெரியப்பன் எல்லாருமே எவ்வளவு திருக்கிசு காரங்கனு. எங்க கையில காசில்லனு தெரிஞ்சவுடனே ஒருத்தன் வந்து எங்கள பாக்கிறுனுகயில்ல.

சம்பாதிச்சுக்கிட்டு வர்றதுக்காக சொத்தக் காரர்களேயெல்லாம் ஒதறிதள்ளிபுட்டு நாடு விட்டு நாடுபோய், இப்ப வீசின கையும் வெறுங்கையுமா வந்து நின்னு, யார்தான் நம்மல மாலே போட்டு வாங்கனு சொல்லப் போருங்க.

நம்ம காணிக்கும் வருஷா வருஷம் 'வாய்தா' கட்டாம அதுவும் இப்ப முந்நூறு நாநூறுன்னு இருக்கு. பத்தாததுக்கு காணியவேற ஒருத்தன்கிட்ட அடகு வச்சு இருக்கானுங்க.

இதையெல்லாம் பேசி முடிக்கனு இங்குள்ள 'மேஸ்திரி' முனிசீப்பு மாரக்கிட்ட சொன்னு காசில்லாம ஒன்னும் செய்ய ஏலாதுன்னு சொல்லிட்டானுங்க. இவிங்ககிட்ட யெல்லாம் மல்லுக்கு நிக்க எனக்கும் ஒடம்புல தெம்பில்ல.

அதனுல நீ ஒடனே பாஸ் போட்டு எடுத்துக்கிட்டு ஊருக்கு வந்து சேரு. நீ வந்துதான் நம்ம காணியை மீட்டாகனும். இல்லேன்னு நம்ம காணிக்கும் ஓலே வைச்சிருவானுங்க.

நீயும் எங்களோட ஊருக்கு வராம போனது நல்லதுனு இப்பதான் தோணுது. ஏன்னு நாங்க இங்க வந்து பார்த்தத்தானே நெலமை புரியுது. நாங்க சின்ன புள்ளேகளாயிருக்கும் போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த நெலம இப்ப இல்ல சொந்தக் காரங்களும் நம்ம கையில காசு இருக்கும் வரைக் கும்தான்.

நீ வரும்போது புனர்வாழ்வு குடும்ப கார்டு நெருப்பும்பாது ஏதாவது ஒரு தொழிலுக்கு எழுதி கிட்டு வா. இல்லேன்னு கெடைக் கிற லோண் காசா இருந்தா ரெண்டு மாசம் தாக்குப்பிடிக் காது. சிலோன்ல நம்ம ஆளுக எல்லாமே வாய்க்கு ருசியா இங் கிலீஸ் மரக்கறி வாங்கி தின்னு புட்டு இங்கேயும் அதுமாதிரி இருக்கப் பார்த்து, உள்ளகாசை யெல்லாம் அது இதுன்னு வாங்கி எல்லாத்தையும் செலவழிச்சிட்டு அப்புறம் ஒருவேளை சோத்துக்கு பறக்கவேண்டிய நெலமையாக இருக்கிறானுங்க.

எனக்குத்தெரிய ஊருக்கு வந்து சேர்ந்த ரெண்டு லட்சம் பேர்ல கொறஞ்சது அம்பது ஆயி ரமாவது செத்துப் போயிருப் பாங்க. ஊர் ஒத்துவராம பாதி பேர், கஸ்டத்துல பாதிபேர்.

ஆகவே மகன் எல்லா விஷ யத்தையும் நல்லா யோசிச்சு ஒடனே வந்துசேரு.

இப்படிக்கு
பெ. முனியாண்டி கங்காணி
(அப்பா)
பந்துவக் கோட்டை



● மகள் குணம் நடையைப் பார்த்துத்தானே காதலித்த வள்,

□ குணத்தைப் பார்த்து காத லிக்கவில்லை. நடையைப் பார்த்துக் காதலித்தவள்... யாரோ சினிமா நட்சத்திரத் தின் நடையாக இருந்தது... காதலில் விழுந்திட்டாள்.

# மெழுகு திரி

தனக்காக அல்ல...
தன் 'திரிக்கரு'
சிதைவதை எண்ணியே
இந்தத்தாய் அழுகிறாள்!
மேனியில் தீ விழுந்து
நரம்புதான் எரியும்
இங்கே—
நரம்பிலே தீ விழுந்து
உடல் எரிகிறது

●

அழுகைக் கப்பலில்
உடல் ஏற்றுமதியாவதால்-
இறக்குமதியாகிறது
நெருப்புச்சரக்கு!
இது நிலவின் விரலா?
விரலையே அழிக்கவா
இந்த நகம் முளைத்தது?

●

நெருப்பு உரம்
இங்கே
நீர்ப்பயிரை வளர்க்கிறது!
இந்த உச்சித்தளிர்
செடியையே தின்னுகிறதா?
திரவ வானத்தில் மிதிக்கிற
தீ நிலவு
புவிக்கு வருவதற்காகக்
கரைகிறது.

●

இந்தக் கொடிக்கம்பம்
கொடுமையானது
தன்னையே தின்னும்
நெருப்புக் கொடியைத்
தன் தலைமீதே
பறக்கவிடுகிறது இந்தக்கம்பம்!
இந்த ஏணியில்
அந்த நெருப்புக்காரன்
எதைத்தேடி இறங்குகிறான்?

●

மலர்கள் இல்லாததினால்
செடியையே தேனுக்குகிறதா
தீவண்டு?

தலையாலே நீர் வார்க்கிறது
மெழுகு தென்னை
'மை'க்கசிவிலே அந்த
எழுதுகோல்
தன்னையே எழுதுகிறதா?

●

அந்த மெழுகுப் பெண்ணுக்கு
நெருப்புப் பூவே
கூந்தலானதால்
கண்ணீர் மணக்கிறது!
அங்கே வடிவது கண்ணீரென்றால்
கண்கள் எங்கே?
ஓ! கண்களைத் தேடித்தான்
அந்த அழுகையா?

●

கண்டு சொல்லுங்கள்!
கண்ணெதிரே நடந்து கொண்டி
ருப்பது
கொலையா? தற்கொலையா?
தன் கண்ணீரில் தான் மூழ்கிச்
சாவது!
தன் நிழலுக்கு ஒளியில்லையே
என்ற துக்கம்
அதனால்-
கடைசி வரைக்கும் கண்ணீர்
அஞ்சலி!!

●

தன்பாதத்தைத் தொட்டுவிட
உருகி வருகிறது உடம்பு!
'சுடு'காடு வந்தபின்தான்
இந்த மெழுகுக்கு மரணம்!
உயிரின் இறுதி ஊர்வலம்
உடல்மேலேயே நடக்கிறது!
நல்லவேளை!
அங்கே ஆடையிருந்தால்
நனைந்தே எரிந்திருக்கும்!
இந்த உயிர்
வாழ்ந்ததற்கு அல்ல
செத்ததிற்கு மட்டுமே
சுவடுகள் உண்டு.

●

—பா. கிரான்ஜீவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**'குயில்'**

மலையகப் படைப்பாளிகள் பற்றி நினைவு கூர்கையில் முன்னணியில் நிற்பவர் மாத்தளை கார்த்திகேசு மலையகத் தொழிலாளிகளின் வாழ்க்கைப் பிரச்சினையை மிகவும் தத்ரூபமாகத் தன் படைப்புகளில் படம் பிடித்துக் காட்டுபவர். இவரது 'காலங்கள் அழுவதில்லை' என்னும் நாடகம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் பரிசும், பாராட்டும் பெற்றது. இந்நாடகத்தை மலையகமக்கள் என்றும் நன்றியுணர்வுடன் நினைவு கூறுவர். இவர் சிறுகதைத் துறையிலும் தனது கைவண்ணத்தைக் காட்டியுள்ளார். இவரது சொந்தத் தயாரிப்பில் உருவாகியுள்ள 'அவள் ஒரு ஜீவநதி' திரைக்கதை கூட மலையக மக்களின் வாழ்வோடு பின்னப்பட்டுள்ளது. ஈழத்து நாடக ஆய்வுகளில் இவர் பற்றிய குறிப்புகள் நிறையஉண்டு இவரோர்ர்தரமான நாடக, சினிமா நடிகருமாவார்.

O———O

தாவீதடிகள் என்றால் எவரும் திடீரெனப் புரிந்து கொள்ளமாட்டார்கள். ஆனால் 'பாதர் டேவிட்' என்றால் எல்லோரும் உடனடியாகப் புரிந்து கொள்வர். அத்துடன் 'ரெனிஸ் கருவிகளோடுஒவ்வொரு நாளும் யாழ்ப்பாணக்கோட்டைக்குச் செல்லும் அவரா' என்று கேட்டும் விடுவார்கள். 'பாதர் டேவிட்' என்பதின் தனித்தமிழ் அமைவே தாவீதடிகள். இவரோர் பன்மொழிப் பெட்டகம். ஒப்பிலக்கியத் துறையில் இவருக்கு நிகரானோர் உலகில் மிகமிகக்குறைவே இவருக்கு முப்பத்திநான்கு மொழிகளில் நிறைந்த புலமை உண்டு, 74 வயதான அடிகளிடம் உள்ள சுறுசுறுப்பை 20 வயது இளைஞனிடம் கூட காணமுடியாது.

O———O

இந்த உலகில் தரத்திற்கு உரிய உண்மையான இடம் இன்னமும் கொடுக்கப்படவில்லை. இதனால் மாபெரும் நட்டத்தை அனுபவித்துக்கொண்டு இருப்பது இந்தஉலகமே. சத்தியத்திலிருந்து எழும் கலைத்துவத்தை கட்டி வளர்க்க, ஆதரிக்க எவருமே இல்லை. எமது முந்தைய மன்னர் பரம்பரைகூட கலைவேந்தர்களை தன் அரண்மனையில் இருத்தி, பொன்னும் மணியும் கொடுத்து தன்புகழையே பாடச் சொல்லியது. அவர்களும் பாடினர். இன்னமும் கலை அடிமைப் படுத்தப்பட்ட ஒன்றாகவே விளங்குகின்றது. இந்த விலையை உடைத்தெறிய கட்டு இலக்கியப் படைப்பாளிகள் பரிசுத்தமான நோக்கத்தோடு அணிதிரளவேண்டும்.

O———O

வீரகேசரி நாளிதழில் தொடர்ந்து வரும் ''ஸ்ரீமான் செல்லக்கிளி'' என்னும் சுந்தரின் புதிய கலைப் படைப்பு சமூகத்தில் உள்ள பிரச்சினைகளை நேர்மையான விதத்தில் அணுகி சமூகத்தில் மலிந்துகிடக்கும் ஊழல்களை அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்துக் காட்டுகின்றது. 'காட்டூன்' கலைவடிவம் மேலைத்தேய நாடுகளிலேயே வேகமாக முன்னேறியுள்ளது. எனினும் ஓவியத்தை இலக்கியமாகக் கருதி அதை விமர்சிப்போர் தொகை உண்டோ? எனும் கேள்வியே பிறக்கின்றது. விமர்சனம் என்பது உரம் போன்றது. கலையாகிய பயிர்வளர விமர்சிக்கமுன் வரும் இளையதலை முறைகளை இனங்காண இலக்கிய நெஞ்சங்கள் விரும்புகின்றன.

O———O

இந்தியத் தத்துவமேதை டாக்டர் ச, இராதாகிருஷ்ணன் கலாயோகி அவர்களின் நூல்கள் பற்றி பின்வருமாறு கூறுகின்றார்.

'நான் டாக்டர் ஆனந்த குமார சுவாமி அவர்களின் நூல்களைப் பலவருடங்களாகக் கற்றுவந்தேன். அவரைப்போஸ்டன் நகரில் 1946 ம் ஆண்டிற் சந்திக்கும் பெருமகிழ்ச்சியைப் பெற்றேன். இந்திய மறுமலர்ச்சிக்கு வழிகோலியவர்களுள் அவருமொருவராவர். இக் காலத்து நிலையற்ற வேஷங்களில் ஏமாற்றமடையும் எங்கள் மாணவர்கள், உண்மை உணர்ச்சியைப் பெறுவதற்கு, அவரின் நூல்களைக் கற்க வேண்டுமென நான் விரும்புகிறேன்.

## இனப்பற்று

பாதை ஓரத்தில் இறந்து கிடந்த மனிதனை ஒரு காகம் கண்டது. வழமைபோல சக காகங்களையும் அழைத்து அவனுடலைப் பசியாற எண்ணியது, அவ்வழியால் ஒரு மனிதன் வந்தான். அவன் இறந்து கிடப்பவனைக் கண்டான். சக மனிதர்களை இவன் கூப்பிட்டுவிடுவானோ என்று அஞ்சியகாகம் அமைதியாக ஒதுக்கில் மறைந்திருந்தது.

இறந்தவனைக் கண்ட மனிதன் காணாதவன்போல நழுவினான். இறந்துகிடக்கும் மனிதனுக்கே இரங்காத மனித இனத்தின் மாமிசத்தை உண்டால் தன்னினத்தின் மதி கெட்டுவிடும் என்று அஞ்சிய காகம் ஓசைப்படாது. ஓடி மறைந்தது.

— பற்குணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘‘கோழிக்குஞ்சுகள் பாவம் என்று வல்லூறுகளிடம் போய்ச் சொல்லமுடியுமா?....’’

# வல்லூறுகள்

கே. எஸ். சிறீஸ்கந்தராஜா

வீட்டிலிருந்து பத்துமைல் தூரத்தில் நான் கடமை பார்க்கும் பாடசாலை இருந்தது. பஸ்ஸிற்கு மட்டும் தினமும் மூன்று ரூபாய் அழுது தீர்க்கவேண்டும். இந்த இலட்சணத்தில் காசுகொடுத்துப் பத்திரிகை வாங்கிப் படிக்க முடியுமா? பாடசாலை விட்டு பஸ் ஏறவரும் அந்தச் சந்தியில் உள்ள உதிரிப்பாகங்கள் விற்கும் கடையில் பத்திரிகை எடுத்து வைத்திருப்பார்கள். பஸ்ஸை எதிர்பார்த்து நிற்கும் நேரத்தில் அந்தக் கடைக்குச் சென்று ஓசியில் பத்திரிகை படிப்பேன். நேரமும் பிரயோசனம், பணமும் மிச்சம்.

அந்தக் கடையின் உரிமையாளர் அதே ஊரைச் சேர்ந்தவர். ஒரு வாலிபன் அலங்காரப்பிரியன். கடையும் அலங்காரமாக இருந்தது. கண்ணாடி அலுமாரிகளில் உதிரிப்பாகங்கள் கவர்ச்சியாக அடுக்கிவைக்கப்பட்டிருந்தன. மேசையின் மேல்பாகத்தில் அளவாகக் கண்ணாடித் துண்டு பொருத்தப்பட்டிருந்தது. வெளிநாட்டுச் சஞ்சிகைகளில் வெட்டி எடுக்கப்பட்ட கவர்ச்சிக் கன்னிகளின் படங்கள் கண்ணாடிக்குள்ளால் தெரிந்தது. விலை உயர்ந்த ரேப்ரெக்கோட் ஒன்று மேசையின் ஒரு பக்கத்தில் இருந்தது.

வழக்கம்போல் என்னைக் கண்டதும் பத்திரிகையை எடுத்து நீட்டினார், கடைச்சொந்தக்காரரான அந்த வாலிபன். புன்முறுவலுடன் வாங்கிப்படித்தேன். ஆசிரியர் என்ற முறையில் என்மீது ஒருமதிப்பு அவருக்கு இருந்தது. எழுத்துத் துறையிலும் எனக்கு ஈடுபாடு இருந்ததை அவர் அறிந்து வைத்திருந்தார்.

‘மாஸ்டர்! நீங்கள் ஒன்றும் எழுதிறதில்லையா?’ அவருக்கு எழுத்துத்துறையில் கரிசனை ஏற்பட்டது ஆச்சரியமாக இருந்தது எனக்கு.

‘‘தூரம் ஒருநாள் ஏதாவது எழுதிறதுதான் தம்பி தெரியாதே குடும்பம் குட்டியளோடை...’’ மெல்லஇழுத்தேன் நான்.

சிறுகதை எழுதிறதில்லையா மாஸ்டர்?

ஆச்சரியம் எனக்கு அதிகமாகியது. சொல்லவந்த பதிலை விழுங்கிவிட்டு, கதை ஒன்றும் சந்திக்குதில்லைத் தம்பி. அதாலை விட்டிட்டன் நளினமாகப்பதில் சொன்னேன்.

‘‘நான் ஒருகதை சொல்லிறன் எழுதுங்கோவன், நல்லகதை.’’

‘‘சொல்லுங்கோ கேட்பம், நல்லதெண்டால் எழுதுவம்.’’ நேரத்தைப் பார்த்தபடியே சொன்னேன். பஸ்ஸிற்கு இன்னும் அரைமணி நேரம் இருந்தது. கட்டாயம் எழுதவேண்டும் என்றும் தான் குறிப்பிட்டுச்சொல்லும் விசயங்கள் அதில் வரவேண்டுமென்றும் அழுத்திக் கூறியபடியே கதை சொல்லத் தொடங்கினார்.

‘‘மாஸ்டர்! இது எனது சொந்த வாழ்வு பற்றிய கதை.’’

‘‘அதுதான் நல்லது. யதார்த்தமான படைப்பாக இருக்கும். உற்சாகம் கொடுத்தேன்.’’

‘‘ஒரு தாய்க்கும் தகப்பனுக்கும் ஐந்து பெண்பிள்ளைகள். தகப்பன் ஒருசிறிய தோட்டக்காரன் கஷ்டப்பட்ட குடும்பம்.’’ ‘ம்’ போட்டுத் தொடரவைத்தேன் நான். மூத்த பிள்ளையை ஒரு மேசன் தொழிலாளிக்குக் கட்டி வைத்தார்கள். அடுத்த பிள்ளையைத் தங்கையின் மகனுக்குச் செய்வதாக உத்தேசித்திருந்தார் அந்தத்தோட்டக்காரரான தந்தை. இந்தப்பிள்ளைகளும் சிறுவயதாக இருக்கும்போதே இரண்டு குடும்பங்களிலும் இந்த விருப்பம் இருந்தது. அவர்களின் விருப்பத்தைப்பிள்ளைகளும் புரிந்து வைத்திருந்தார்கள். இதன் தாக்கம் அந்தப் பிள்ளைகளின் மனத்தில் ஒரு... ஒரு...

‘ஆசை என்று சொல்லுங்கோ’ என்றேன் நான்.

ஓ! ஒரு ஆசையை வளர்ந்து இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அந்தத் தங்கையின் மகன் — முறை மச்சான் யார் தெரியுமா...? நான்தான்'' என்ருர் அவர். இப்படிச் சொல்லும் அவர் கண்கள் அகலவிரிந்தன.

''காலம் நகர்ந்தது. படிப்பில் கவனம் செல்லாததால் உதிரிப்பாகங்கள் விற்கும் கடையொன்றிற்கு வேலைசெய்வதற்காகக் கொழும்பு நோக்கிச்சென்றேன்'' எத்தனை வயதில் சென்றீர்கள் என்று நான் கேட்டேன். பதினேழாவது வயதில் சென்றேன். அப்பொழுது எனது மைத்துனிக்குப் பதின்மூன்று வயதிருக்கும். மைத்துனியைப் பற்றிக் கூறும்போது இன்ப உணர்வுகள் அவர் முகத்தில் தோன்றின.

தூரத்திற்குச் சென்றுவிட்டதனுல் என் மனதிலிருந்து அவளின் நினைவுகளும் தூரத்தில் வைக்கப்பட்டுக் கொண்டே வந்தன.

ஒரு விசயம் தம்பி. நீர் சொல்லும் காரணம் சரியாகப்படவில்லை. தூரத்திற்குச் சென்றுவிட்டால் நினைவுகளும் தூரத்தில் வைக்கப்படுமா? ஒருவேளை கொழும்பு உமது மனதில் ஒரு மாற்றத்தைக்கொண்டு வந்திருக்கலாம்.

அப்பிடியும் சொல்லலாம். மற்றது மாமா வீட்டுக்கும் எங்கடை வீட்டுக்கும் சில்லறைத் திறுத்தியீனம் அவை கஷ்டப்பட்ட ஆட்கள் அவையின்ரை போக்குவாக்கு எங்கடை அப்பருக்குத் திறுத்திப்படேல்லை. மற்றது பாருங்கோ... உங்களுக்கு எண்டபடியால் சொல்லிறன். எனக்கு ஒரு பாட்ஸ்கடை தனியாகத் தொடங்க வேண்டுமெண்டதுதான் முதல் ஆசை.

ஓம்! ஓம்! நெடுகவும் சம்பளத்துக்கு வேலைசெய்யக் கட்டுமே? தனியத் தொடங்கினுல் நல்லதுதானே. சரியாய்ச் சொன்னியள் மாஸ்டர். அப்பிடி ஒண்டைத் தொடங்க மாமா வீட்டுக்கை சம்மந்தம் எடுத்தால் நடக்காது. இதுகளாலைதான் கொஞ்சம் மனமாற்றம்.

இருந்தாலும் லீவிலை ஊருக்கு வாறபோது மாமா வீட்டுக்குப் போகாமல் விடுகிறதில்லை. மச்சாள் முதல் கொண்டு மாமாவரைக்கும் விழுந்தடிச்சுக்கொண்டு உபசரிப்பார்கள் என்ன இருந்தாலும் எனக்கு ஏதோ உள்ளூற ஒரு இன்பம் அங்கு போய் வருவதில்.

சொல்லிவிட்டுச் சற்று நிறுத்தினுர். சரி! மேலே சொல்லுங்கோ என்று அவர் நினைவுகளைக் கலைத்தேன் மீண்டும் தொடர்ந்தார்.

அப்புவுக்கு இது பிடிக்கிறதில்லை. இனிமேல்பட்டு அந்த வளவு மிதிக்கக்கூடாது என்று கட்டளையிட்டார். ஒரு தகப்பன் சொல்லை மகன் மீறுவது சரியோ? என்று என்னைப்பார்த்துக் கேட்டார்.

அது எப்படிச் சரியென்று சொல்லலாம்? ஓசிப்பத்திரிகை வழங்குபவராயிற்றே அவர். நானும் ஒத்துப் பாடினேன். மாமா வீட்டுப் போக்குவரத்தை முற்ருகக் கைவிட்டேன் உறவுகள் முறிவதைக்கண்ட மாமா, ஐயாவிடம் எனது சம்பந்த விஷயமாகக் கதைத்தார். ஐயா ஏதோ சாக்குப் போக்குச்சொல்லி மறுத்துவிட்டார். எனக்குக் கடிதம் எழுதிக்கேட்டார் மாமா. ஐயாவின் முடிவின் படியே நடப்பேன் நான். என்று பதில் எழுதிவிட்டேன். மீண்டும் லீவில் சென்றபோதெல்லாம் அவர்கள் வீட்டுப்பக்கம் செல்வதில்லை. தூரத்து உறவு மாமிகளின் வீட்டிற்குச் சென்று வருவது ஒரு வழக்கம். முறைமாமா வீட்டிற்குப் போவதே இல்லை. நல்லது என்றேன் நான். நெஞ்சில் ஏதோ அழுத்துவது போலிருந்தது எனக்கு. கொஞ்சக்காலம் போகத்தனியாக ஒருகடை போடக்கூடிய வசதிகள் சில எனக்கு வந்தது. கொழும்பில் எனது கடை முதலாளிக்கும் எனக்கும் பிரச்சினைகள் இருந்தபடியால் சொந்த ஊரிலேயே போடலாமென்று இந்தக்கடையை ஆரம்பித்தேன். இப்போது நான் ஒரு முதலோடு இருக்கின்றேன். வியாபாரமும் சந்தோஷப் படும்படியாகவே இருக்கின்றது. சரி! கதைக்கு வாருங்கள் என்றேன் நான். மீண்டும் தொடர்ந்தார். எனது மைத்துனிகளில் மூவர் நெசவு வேலை செய்யப் போய்வந்தார்கள். இந்தக் காலத்தில், அவளுக்கும் ஒரு குறைந்த ஜாதிக்காரனுக்கும் தொடர்பு எற்பட்டது. மாமா இதைக்கண்டித்தார். கட்டிவைத்து அடித்தார் என்றும் கேள்வி. நான்கூடப் புத்திசொல்லி அவளுக்கு ஒருகடிதம் எழுதினேன். கடிதத்தைக் கிழித்துப் போட்டுத் திருப்பி எனக்கே அனுப்பி விட்டாள். அவள்... ஒரு... ஒரு... நெஞ்சழுத்தக்காரி.

ஒருநாள் அவள் அவனுடன் ஓடியே விட்டாள். ஓடியவள் ஓடட்டும் சனியன் துலைஞ்சிருக்கும் பரவாயில்லை

## தம்—பதிகள்

முற்காலத்தில் பெண்கள்தனியாக எங்குமே செல்வதில்லை. சிறுவயதில் தனது பெற்ருேருடன் மணமானபின் தமது கணவனுடனும் தான் தமது வீட்டுக்கு வெளியே செல்வார்கள்.

திருமணஞ் செய்தபெண் தமது பதியோடு செல்வதுதான் தமிழர்களின் அன்றய வழக்கம். அதனுல் ஒருபெண் வெளியே செல்லும்போது யாருடன் செல்கிருள் என்ருல் தம் பதியுடனே செல்கிருள் தம்—பதிகளோடு செல்வதுதான் தமிழ்ப் பெண்களின் வழக்கம்.

இதுதான் இன்றும் கணவனும் மனைவியும் என்று சொல்வதற்குப் பதிலாக தம்பதிகள் என்று வழங்கி வருகின்றது.

—அகளங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தத் தெருவிலேயே அவளைச் செய்தவன் ஒரு சைக்கிள் திருத்தும் கடையைத்திறந்து இருக்கிறான் எங்கடை குடும்பத்துக்கு அவமானம் தேடித்தந்தவள்...! அவள்... ஆத்திரம் அவரைப் பேசவிடாமல் தடுத்தது. உடம்பு பதறியது. தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு சிறிது நேரத்தால் தொடர்ந்தார்.

மூண்டு வருஷம் ஆகேல்லை. மூண்டு பிள்ளையளும் பெத்துப் போட்டாள். ஒண்டு சிலைத்தலைப்பிலை ஒண்டு தோளிலை, ஒண்டு மடியிலை சாப்பாட்டுக்கே வருமானம் பத்தாது. அவளுக்கு உதுகும் வேணும், இன்னும் வேணும். அவளைக் கதையிலை எழுதிப் பேப்பரிலை போட்டுப் பரிசு கெடுத்தவேணும் மாஸ்டர்.

எங்கடை தாய் தேப்பன், மாமன் மாமி ஆக்களுக்கு வயதுபோன காலத்திலை வசையைத் தேடித்தந்தவள்... பாதகி!

நீங்கள் இதைக்கதையினை எழுதுவீர்களா மாஸ்டர் மீண்டும் அவர் உடம்பு இலேசாகப்பதற ஆரம்பித்தது நான் மௌனமானேன். மாஸ்டர்! எழுதுவீர்களா? எழுதமாட்டீர்களா? சொல்லுங்கோ.

சரி! எழுதினால் போச்சு என்றேன் நான். எனது பதில் அவருக்குச் சந்தோஷத்தைக் கொடுத்திருக்க வேண்டும்.

பஸ்சும் இரைச்சலுடன் வந்து கடையின் முன்னால் இருந்த பஸ்தரிப்பில் நின்றது. அதைப்பார்த்த அவரும் தவிர்க்க முடியாமல் என்னை வழியனுப்பினார்.

மறுநாள்...

நேற்றைய சம்பவத்தை மறந்ததுபோல் பாசாங்கு செய்துகொண்டு பத்திரிகையைப் படித்தேன்.

மாஸ்டர் எழுதிப்போட்டியளா?
மறந்து போனியள் போலை கிடக்கு.

சே! நான் மறக்கவில்லைத் தம்பி. கதையின் அமைப்புக்களை நெறிப்படுத்துவதற்காகச் சில கேள்விகளை உம்மிடம் கேட்க வேண்டுமென்று நினைத்திருந்தனான். ஓம் கட்டாயம்! கேளுங்கோ சொல்லிறன்.

அந்தப்பெண் குறைந்த ஜாதிக்காரனுடன் தொடர்பு வைக்காமலிருந்தால் நீங்கள் அவளைச் சம்மந்தம் செய்வதாக உத்தேசம் இருந்ததா? எனநான் கேட்டேன்.

அவர் கடைவாய்ப்பல் ஒன்று விழுந்திருந்தது. அது அவர் சிரிக்கும்போது தெரிந்தது. சிரித்தபடியே பதில் கூறினார்.

எங்கடை அப்புவுக்கு விருப்பம் இல்லாமல் என்னெண்டு பாருங்கோ செய்யிறது.

நான் சற்று நிதானித்துவிட்டுக் கூறினேன். தம்பி! நீர் சொன்னகதை நாவலாக எழுதக்கூடிய பெரிய கதை. சிறுகதைக்குள்ளே அடக்கேலாது. நாவல் எழுதி எனக்குப்பழக்கம் இல்லை. நான் தொடர்ந்து எதுவும் கூறுமல் மௌனமானேன்.

கோழிக்குஞ்சுகள் பாவம் என்று வல்லூறுகளிடம்
போய்ச்சொல்ல முடியுமா? ●

## கவியின்
## கவின் சுவைகள்

அது ஒரு மத்தியானப் பொழுது. சிரித்திரன் காரியாலயத்தில் ஆசிரியரோடு அளவளாவிக் கொண்டிருந்தேன். இடையிலே அங்குவந்தார் இலக்கணப்புலியானபண்டிதர் வீரகத்தி அவர்கள். ஆகா... இனி என்ன பாலோடு தேன் கலந்த பகரொணுச் சுவையை ரசிக்க நல்ல வாய்ப்புக் கிடைத்ததே என்ற பெரும் மகிழ்ச்சி எனக்கு

தனக்கே உரிய நகைச்சுவைப்பாணியில் உரையாடத் தொடங்கினார் வீரகத்தி அவர்கள். தமக்கு சொந்தமான நகைச்சுவைப் பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர் அவர்கள் அவரோடு நகைச் சுவையில் விளையாடத் தொடங்கினர். நானோ அவைகளைக் கேட்டுத் திண்டாடிப் போனேன்.

''தமிழ் இலக்கணம் பலரை எமக்கு இனங்காட்டுகிறது'' என்றார் பண்டிதர்.

''எப்படி என்றோம் இருவரும்''

'வர்த்தகர்' என்று சொல்வது தமிழிலக்கணப்படி பிழையானது. ''வருத்தகர்'' என்பதே சரியானது.

இந்தச் சொல் வியாபாரிகளை இனங்காட்டுகிறதுதானே என்றார் அவர்.

உரையாடல் நீண்டு கொண்டு போனது.

''ஒருபக்கக் கட்டுரைக்கு இருபக்க மேற்கோள் காட்டுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்றேன் நான்.

இரு பொருட்பட நகைச் சுவையோடு பதில் கூறினார் பண்டிதர்.

''நான் எவர் மேற் 'கோள்' சொல்வதையும் விரும்பவில்லை.

இடையே இக்காலக் காதல் பற்றிய கதை எழுந்தது. காதலித்தல் என்ற சொல் 'காதல்' என்பது இல்லாததாகி விட்டது. 'காமம்' தான் நிறைந்திருக்கிறது. அதனால் 'காமலித்தல்' என்ற சொல்லே பொருத்தமானது என்றார் பண்டிதர்.

தர்மராஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவரின் இலக்கியப்பணி

ஒருகதை, கவிதை, கட்டுரை எழுதி இரண்டொரு இலக்கியக்கூட்டங்களில் பேசிவிட்டால் அவர் இலக்கியக் காரனுகி விடுவார். இலக்கியம் தன்னுல்தான் என கிசுகிசு என்று அவருக்கு நினைப்புவந்துவிடும். இந்த அவலச் சூழலில் உண்மையான இலக்கிய நேசிப்பும், ஆர்வமும், நல்ல இலக்கியங்களைப் பிறருக்கு அறிமுகம் செய்து வைக்கிற துடிப்பும் உள்ள ஒருவர் மாத்தளை ஆர். பத்மநாதன் — எழுத்தாளனுக இல்லாதிருக்கும் இலக்கிய ஈடுபாடுள்ளவர்களிடையே பரீட்சைய மாணவர் வாசகர் வட்டத்தினுல் வெளியிடப்பட்ட அக்கறை இலக்கியம் என்ற அருமையான தொகுப்பில் இடம் பெற்ற அருமையான இலக்கணப் படைப்புகளைத் தொகுத்துதவியது பத்மனுதனே என்பது பலருக்குத் தெரியாத விஷயம்.

அண்மையில் திரு பத்மநாதன் தமிழகம் போயிருந்தார். தமிழகத்தில் வெளிவந்த நல்ல இலக்கிய நூல்கள், சஞ்சிகைகளைப் பல இடங்களில் அறிமுகம் செய்து வைத்தார். 'க்ரியா' காரியாலயத்தில் இவற்றைக் கொண்ட ஒரு கண்காட்சியை ஒழுங்கு செய்திருந்தார் பல இலக்கிய அமைப்புகளுடனும் எழுத்தாளர் பலருடனும் பரஸ்பர புத்தக வினியோகம் சம்பந்தமாக கலந்துரையாடினுர். ஆக்கபூர்வமான முடிவுகள் கிடைத்துள்ளன. அத்துடன் இங்குள்ள நல்ல படைப்புக்கள் தமிழகத்தில் நூலுருப்பெறுவதற்கும், சஞ்சிகைகளில் வெளிவருவதற்கும் முயற்சிக்கப்பட்டுள்ளது. தனது முயற்சிகளையிட்டுத் திருப்திப்பட்டுக் கொள்ளும் அவர் உண்மையில் இந்த முயற்சி பத்து வருடங்களுக்கு முன்பே மேற்கொள்ளப் பட்டிருக்க வேண்டும், என்று வருத்தத்துடன் கூறுகின்ருர்.

இங்கிருந்து தமிழகத்து இலக்கிய யாத்திரை மேற்கொள்ளும் நமது இலக்கியக் காரர்கள், பேட்டிகள், சொற்பொழிவுகள் மூலம் தம்மைச் சேர்ந்தவர்கள் மத்தியில் மட்டும் இலக்கியத்தை வளர்த்து (?), தம்மைப் பிரபல்யப்படுத்திக் கொள்கையில் திரு. பத்மநாபனின் முயற்சிகள் ஆரோக்கியமானவை.

பல இலக்கிய அமைப்புகளுடன் டெல்கியில் அண்மையில் நடைபெறவிருக்கும் தமிழ் நூல் கண்காட்சியில் இலங்கைத் தமிழ் நூல்களும் இடம்பெற தற்போது முயற்சியில் ஈடுபட்டுள்ளார் இவர்.

— சசி. கிருஷ்ணமூர்த்தி

● கடமை என்னும் பாதையில் மலர்ந்திருக்கிற மலர் தான் அன்பு.


## சிற்றி பேணிச்சர்

- கலைத்துவமான
- நிலையான உறுதிமிக்க
- விலையில் நேர்த்தியான

கவினுறு தளபாடங்களின்
மனங்கவர் தேர்வுக்கு

உங்கள் இல்லம்
பளிங்குமாளிகையாகத் திகழ

உங்கள் தேவைகளை
திருப்தியுடன் பெற...

## சிற்றி பேணிச்சர்

● கஸ்தூரியார் வீதி
● யாழ்ப்பாணம்.

நூலுலகில் ஒரு காவியநூல்
அழகை ஆராதனை செய்பவர்கள்
தமது சித்திரத் தையல்வேலைகட்குப் பாவிப்பது

## முயல் மார்க் நூலே

தயாரிப்பாளர்கள்

## சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பனி.

கொழும்பு: 12

அதிக சுவைக்கு அண்ணு கோப்பியே!
அண்ணு கோப்பிக்கு நிகர் அண்ணு கோப்பியே!!

## அண்ணு கோப்பி

## தொழிலகம்.

இணுவில். தொலைபேசி; 7412

# எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களானல்...

செங்கதிர்

முற்றத்து நிலவு பொழிகிறது...

திருநீறுபோட்டு மினுக்கிய லாம்பு உரலின்மேல் கிடந்து மங்கலான வெளிச்சத்தை மௌனமாகப் பரப்புகிறது...

முற்றத்தில் வளர்ந்து நிற்கும் பூவரசமரங்களின் மேல் முதுகைச் சாய்த்துக்கொண்டு அந்தக் குடும்பத்தின் அங்கத்தவர்கள் சிலர் இருக்கிருர்கள்,

''பெரியண்ணை... இந்தா வெட்டுக்கத்தி...'' தாவாரத்தில் செருகிக் கிடந்த வெட்டுக்கத்தியை அம்மாவைக்கொண்டு எடுப்பித்துக்கொண்டு வந்து கடைசித்தங்கை - பாமா நீட்டுகிருள்...

''சோதினைக்கு இன்னும் நிரம்ப நாளா இருக்குது... கொஞ்ச நேரம்தான் வேலைசெய்வன்... நான் படிக்கவேணும்...'' பனங்காணிக்குள் இருந்து கட்டிக் கொண்டுவந்து போட்டுள்ள பனை ஓலையை ஒவ்வொன்ருக கொண்டுவந்து போட்டுவிட்டு, எஸ். எஸ். சி எடுக்கப் போகின்ற தங்கை சிணுங்குகிருள்.

பாமாவின் கெஞ்சலுக்கு இணங்கி ஓலைச்சட்ட மொன்றை கிழித்து சின்னண்ணன் 'பீப்பி' செய்கின்ருன்.

தோட்டத்தில்பிடுங்கிஎடுத்த புகையிலைக் கட்டைகளை அடுப்புக்குள் வைத்து புகைந்து கொண்டிருக்கிற, அடுப்போடு மாரடிக்கிற அம்மா புலம்புவது முற்றத்தில் இருக்கிறவன்களுக்கு தெளிவாகக் கேட்கிறது. குடில் புகை வந்து போல் அடுப்படி புகைக்கிறது...

தங்கை கொண்டுவந்து தந்த ஓலையை பெரியண்ணன் ஓங்கி வெட்டுகிருன். 'சர்...சர்...' என கத்தி ஓலையில் இறங்குவதில் இருந்து பெரியண்ணன் கோபத்தில் இருக்கிருன் என்பதை மூத்த தங்கச்சியால் உணரமுடிகிறது. வெட்டிய மட்டைகளை எறிவது தொடக்கம் வெட்டுக்கத்தியால் ஓலையைக் கொத்தி கைக்கெடுக்கின்ற செயல்வரை எல்லாமே வழக்கத்துக்கு மாருக இருப்பது மூத்த தங்கச்சிக்கும் சின்னண்ணனுக்கும் துல்லியமாகத் தெரிகிறது.

''பெரியண்ணனுக்கு இண்டைக்கு கோபம்போலை'' எஸ். எஸ். சி. படிக்கின்ற தங்கை அண்ணனிடம் கதை கொடுக்கிருள். தான் எந்தநேரம் என்ன கதைத்தாலும் பெரியண்ணன் பேசமாட்டார் என்ற துணிவில் அவள் கதைக்கிருள்.

பெரியண்ணன் அவளை மௌனமாகவும் ஆழமாகவும் பார்த்துவிட்டு திரும்பவும் ஓலையை வெட்டுகிருன்...

மாட்டுக்கொட்டிலில் நிற்கின்ற 'சிவப்பி' கத்துகிறது. வழமையாக ஓலை கிழிக்கத் தொடங்க கத்துகின்ற அது இன்றைக்கென்னவோ அடிக்கடி கத்துகிறது...

''இப்பஓலை கிழிக்கவேணுமடி காலமை உனக்கு 'பீப்பி' செய்து தாறன்டி-'' சிணுங்கிய பாமாவை ஆறுதல் படுத்திவிட்டு வெட்டிய ஓலைச் சிறகொன்றை எடுத்துப் போட்டு அதன்மேல் இருந்து கொண்டு வேருெரு சிறகை எடுத்து மடிமீது வைத்துக்கொண்டான் சின்னண்ணன்.

இடக்கை பெருவிரல்ஈர்க்கையும் அடவியணையும் நுள்ளி மற்ற விரல்களுடன் ஒன்ருகப் பிடித்திருக்க இரண்டுக்கும் இடையேயுள்ள ஓலையை வலதுகை இழுத்தெடுக்கிறது...

சின்னண்ணன், மூத்ததங்கச்சி, எஸ். எஸ். சி படிக்கின்ற தங்கை ஒவ்வொருவரும் ஓலை கிழிக்கத் தொடங்கி விட்டார்கள்.

கிழித்த ஓலைச்சட்டங்கள் சிலவற்றை தும்பு தும்பாகக் கிழித்துக் கொண்டு மூத்த தங்கச்சி மாட்டுக் கொட்டிலை நோக்கிநடக்கிருள்.

''அண்ணனுக்கு விசயம் தெரிஞ்சிட்டுதோ—'' மெதுவாக முணுமுணுத்துக்கொண்டாள்.

தும்பு ஓலையை 'சிவப்பி'க்கு போட்டுவிட்டு மூத்த தங்கச்சி அடுப்படிக்குள் நுழைந்து கொண்டாள்.

''அம்மா... அண்ணனுக்கு விசயம் தெரிஞ்சிருக்குமோணை'' இரகசியமாகக் கிசுகிசுத்தாள் அவள்.

பொங்கிக்கொண்டு எழும்பிய குழம்பை அகப்பையால் துழாவி விட்டு அம்மா சொன்ஞள், வேலை இல்லாத பெண்டுகள் அந்தக் கதையை நாலுவீட்டிலை கூடி இருந்து கதைச்சிருப்பார்கள். பெரியவன்ரை காதிலை எப்படியோ விழுந்திருக்கும்'' அம்மாவின் கண்கள் கலங்கிவிட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனன விழா

ஒரு; வெறும் தண்ணி குடித்து
உயிர்வாழும் நீ ஏன் இன்று
ஐஸ்தண்ணி குடிக்க விரும்பு
கிருய்.

பிச்சைக்காரன்: இன்று எனது
பிறந்தநாள்.

—ஜோக்கிரட்டீஸ்

பெரியண்ணனுக்கு கலியாணப்பேச்சு நடந்து சீதனப் பேச்சில் இருபக்கத்துக்கும் தர்க்கம் எழுந்த போது சீதனத்தைக் குறைப்பதற்காக பெண்வீட்டார் கேட்ட கேள்வி.

''பொடியனுக்கு என்ன வேலை...உழைப்பு இல்லாதவருக்கு இவ்வளவு சீதனம் போதாதோ —

கடைசி ஓலையையும் வெட்டி மட்டையை எறிந்துவிட்டு ஓலைச் சிறகொன்றைப் போட்டுவிட்டு அமர்ந்தான் பெரியண்ணர்.

கருமேகங்கள் சந்திரனை மூடிக் கொண்டு விட்டது. மங்கலான லாம்பின் வெளிச்சத்தில் சகோதரங்களின் முகத்தை நோக்கிஞன்.

மூத்ததங்கச்சியின் முகம் கறுத்து இறுகிக் கிடந்தது. ''பொடியனுக்கு என்னவேலை...' பெண்வீட்டார் கேட்டகேள்வி மனதில் ஊசலாடியது.

அவனுடைய பலவீனத்தை அறிந்து கொடூரமாகத்தாக்கி, இருக்கிருர்கள். பெரியண்ணனின் வலது கையில் ஓலைச்சட்டங்கள் கனக்கின்றன... அவனுல் அந்தக் கேள்வியை மறக்கமுடியவில்லை. கன்ன நரம்புகள் 'விண்விண்' என இடிக்கின்றன.

''அம்மாட்டை தேத்தண்ணிக்குச் சொல்லு'' எஸ். எஸ்.சி படிக்கின்ற தங்கையிடம் சொன்ஞன்.

'நீ இருந்து கிழியடி... நான் போட்டுக் கொண்டுவாறன் —' மூத்ததங்கச்சி குசினிக்கு விரைவாகப் போகிருள்.

பெரியண்ணனுக்கு யோசினை அதிகமென்ருல் அடிக்கடி தேநீர் குடிப்பான் என்பது அவளுக்குத் தெரியாதது அல்ல.

அவன் விண்ணப்பித்தவேலையொன்றும் அவனுக்கு இன்னும் ஏன் கிடைக்கவில்லை.

ஒரு அரசாங்க உத்தியோககாரனைத்தான் தன்மகளுக்குத் திருமணம் செய்துவைக்க வேண்டுமென ஒவ்வொரு பெற்ருரும் விரும்பக் காரணமென்ன?

அவனுடைய சமூகத்தில் உத்தியோகத்தால் திருமணம் நிச்சயிக்கப்படும் நிலை உண்டானது ஏன்?

இன்றுவரை பெரியண்ணன் இப்படிச் சிந்திக்கவே இல்லை. திருமணச் சந்தையில் பெரியண்ணனை நிறுத்திய போது பெண்வீட்டார் கேட்டகேள்வி ஒன்றுதான் அவனைச் சிந்திக்க வைக்கிறது. அவர்கள் கேட்ட ஒருகேள்வி அவனுடைய சுயகௌரவத்தைக் களங்கப்படுத்துகிறது. என்பதை அறிந்து மனம் துடிக்கிருள்.

இந்த மானபங்கம் ஏற்படக் கூடாது என்றுதான் அவனுடைய சமூகத்து இளைஞர்கள் உத்தியோக மோகங்கொண்டு அலைகிருர்களா?

கேள்விகள் எழும் வேகத்தில் விடைகள் பிறக்கவில்லை. தெரியாத கேள்விகள் பெரியண்ணனின் மனதைக் குடைகிறது.

மூத்த தங்கச்சி தேநீரைக் கொண்டுவந்து பெரியண்ணனின் பக்கத்தில் வைக்கிருர்.

விறைத்துப்போன கால்களை நீட்டிக்கொண்டு முதுகை பூவரச மரத்தோடு இதமாகச் சாய்த்துக் கொண்டாள்.

இருமேகங்கள் விலகி நிலவு பொழிகிறது...

செம்பில் கிடந்த தேநீரை கோப்பையில் ஊற்றி விட்டு உறிஞ்சத் தொடங்கிஞன்.

''தேத்தண்ணி கிடக்கு... குடிக்கிறவை குடியுங்கோ...'' ஓலைச் [illegible] குறையாக வைத்விட்டு சமீபமாக வந்து அமர்ந்து கொண்டாள் படிக்கின்றதங்கை.

''ஏனண்ணை இண்டைக்கு 'உம்' எண்டு இருக்கிருய்... என்னண்ணை நடந்தது...'' ஆதரவாகக் கேட்டாள் அவள்.

'ஏன்... நல்லாத்தானே இருக்கிறன்...'' சொன்னவனின் கண்கள் குளமாகிவிட்டன. தொண்டையில் விம்மல் ஒலி அடங்கியது.

மற்றும் நேரம்என்ருல் அவள் அப்படிக் கதைப்பதை மூத்ததங்கச்சி விரும்பமாட்டாள். அவளை அதட்டி அவளின் அலம்பலை நிற்பாட்டி விடுவாள். அப்போது மட்டும் மூத்த தங்கச்சி அவளை அதட்டவே இல்லை!

பெரியண்ணனின் மௌனம் எப்படியாவது யார் மூலமாவது கலையவேண்டும். நாள் முழுவதும் ஒரே யோசனையிஞல்...

பெரியண்ணனின் அமைதியான மௌனத்திற்கு பின்ஞல் ஒழித்திருந்தால் ஒழித்திருக்கின்ற பயங்கரம் என்ன?

மூத்த தங்கச்சியால் அதைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னண்ணனிற்கு ஏதாவது என்றால் ஆள் இப்படி தூரத்தில் இருக்கமாட்டான். அவனைவிட அவனுக்கு ஒரு வயதுதான் வித்தியாசம். அதனால் நேரடியாகவே விசயத்தில் இறங்கி ஆலோசனையோ ஆறுதலோ சொல்லி விடுவாள்.

சின்னண்ணன் எத்தனையோ இன்ரவியூவுக்கு போய்வந்துவேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையை இழந்து விட்டான். யாரையாவது தெரிந்தவர்களைப் பிடித்து வேலை செய்தாலொழிய வேலை கிடைக்கமாட்டாது என்று திடமாகவே சொல்லிவிட்டான்.

அவனுடைய நண்பர்கள் பலர் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புத்தேடிச் சென்ற போது அவனும் அந்த ஆசைக்கு அடைக்கலமானான், சின்னண்ணன் அந்த ஆசையில் மயங்கிப் போயிருந்தபோது மூத்ததங்கச்சி எவ்வளவோ ஆலோசனை சொன்னாள்.

'வெளிநாடு போய்த்தான் உழைக்க வேணுமா... இஞ்சை ஏதாவது ஒரு தொழில் செய்யக் கூடாதோ-?'' கேட்ட கேள்விகளில் இதுவுமொன்று.

''என்ன தொழில் செய்யச் சொல்றாய்? நீ நினைக்கிற தொழிலைச் செய்து எங்களின்ரை குடும்பம் வசதியாக வாழ்ந்திடுமோ... தெரியாமல்தான் கேக்கிறன் வசதியாக வாழ வேண்டுமென்று நினைக்கிறது பிழையோ?'

சின்னண்ணன் கேட்ட கேள்விக்கு அவள் பதில் சொல்ல முடியவில்லை ;பெரியண்ணன் கேட்கின்ற கேள்விக்கு அவள் பதில் சொல்ல முடியுமா?

''என்ன தொழில் செய்தாலென்ன... எல்லாம் தொழில் தானே' ஒருநாள் உறவினர் ஒருவர் பெரியண்ணனைக் கேட்டதற்கு பெரியண்ணன் கேட்ட எதிர்க்கேள்வி.

:'உங்களின்ரை தொழிலைச் செய்யவிடாமல் உங்களின்ரை மகனை கப்பலிலை வேலைசெய்ய ஏன் அனுப்பினியள்?''

பெரியண்ணன் முகத்துக்கு நேரே கேட்கும். அவனுடைய தனிச் சுபாவமே அது.

அவனுக்கு ஏதாவதுசொல்லப் போய் இருக்கின்ற கோபத்தில் ஏதாவது கேட்டானென்றால் அவளுக்கு அச்சமாக இருந்தது.

பெரியண்ணனுக்கு வேலை இருக்கோ இல்லையோ அவன்தான் அவர்களுடைய குடும்பசுமையை சம்பிரதாய பூர்வமாகவது ஏற்றுக் கொள்ளவேண்டும். அவன் குடும்பத்திற்கு ஏதாவது செய்வானோ செய்யவில்லையோ அவனை நம்பித்தான் எல்லாருமே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வாழவைக்க வேண்டியவனுக்கே ஒருவாழ்க்கை அமைவதில் இத்தனை நெருக்கடி என்றால் அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களை அவன் எப்படி வாழவைக்கப் போகிறான்?

மூத்த தங்கச்சியின் கண்கள் கலங்கிவிட்டன.

''ஆண்டவா, எங்களின்ரை குடும்பத்தை இவ்வளவு ஏன் சோதிக்கிறாய்?'' அவளால் இயலக் கூடியது அந்தப் பிரார்த்தனை ஒன்றுதானே.

'சிவப்பி' கத்துகிறது...

சின்னண்னன் கிழித்த ஓலைச் சட்டங்களை அம்மா தும்பாக்கிறாள்.

'சிவப்பியின்' கத்தலின் இரகசியம் அம்மாவுக்கு புரிகிறது.

குடும்பத்தின் சுமையைத் தாங்க வேண்டுமென்றோ குடும்பத்திற்கு பாரமாக இருக்கக்கூடாதென்றோ பெரியண்ணன் ஒரு மாதத்துக்கு முன்புவரை கடையொன்றில் வேலைசெய்துகொண்டு தான் இருந்தான். கடைசித்தடவையாக கடையால் வந்தபோது அவன் சொன்னது அம்மாவுக்கு நினைவுக்கு வந்தது.

''தனிப்பட்ட முதலாளிமாருக்கு தனிக்குணமே இருக்கணை அத்தியாவசியமில்லாத 'தேவை' நிறைவேற்றுவதற்கு செலவழிக்கிற காசைவிட ஓய்வு ஒழிச்சலின்றி வேலை செய்யிறவனுக்கு சம்பளம் அள்ளியா கொடுக்கிறாங்கள்... எவ்வளவுக்கு வேலை வாங்க முடியுமோ அவ்வளவுக்கு வாங்குவாங்கள்... கடையிலை வேலைசெய்யிறவனுக்கு தொழிலைப்பொறுத்தவரை என்னபாதுகாப்பு இருக்கு... நடைமுறையிலை ஒண்டுமே இல்லை ஒரு சுதந்திரமற்ற சீவியம்... அடிமைச் சீவிய முறையை பாக்க வேணுமெண்டால் கடையிலை வேலை செய்கிற பொடியனைப் போய்ப் பாக்கவேணுமாச்சே; அதுவும் ஒரு உழைப்பு... அதுவும் ஒரு வாழ்க்கை... இனிகடையிலை வேலைசெய்கிற தெண்ட பேச்சுக்கே இடமில்லை...'

அம்மா ஓலைச் சட்டங்களைத் தும்பாக்கிறாள்...

பெரியவனுக்கு வேலை-இல்லையென்று கலியாணம் குழம்பிப் போயிருக்கிறது.

சின்னவனின் விருப்பத்திற்கு வெளிநாடு செல்ல அனுமதிக்க அவளிடம் துளிகூட தைரியம் இல்லை. மூத்தவளுக்கும் எங்கேயாவது கட்டிவைக்கவேண்டும்.

அம்மாவின் இதயம் ஓலைச் சட்டத்தைப்போல் தும்பாகிறது.

மௌனமாகச் சிந்தனைசெய்து கொண்டிருந்த பெரியண்ணன் எஸ்.எஸ்.சி படிக்கின்ற தங்கைக்கு அழுத்தமாகச் சொன்னான்.

'சோதனை முடியுமட்டும் எங்களுக்கு வேலைசெய்ய வேண்டாம் கவனமாகப் படிச்சு பாஸ் பண்ணிப் போடு... வேலைதான் கிடைக்காவிட்டாலும் படிச்சிருக்கிறம் எண்டாவது சொல்லலாம்... தயவுசெய்து அவளுக்கு ஒருதரும் வேலைகொடுக்க வேண்டாம்... நீ போய்ப்படி...' பெரியண்ணன் ஒருநாளும் இப்படிச் சொல்லவே இல்லை. எவ்வளவு நிதானமாகக் கதைக்கிறான்.

பெரியண்ணனுக்கு எந்த நேரத்திலுமே பயம்கொள்ளாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன் அப்போது பயந்தே விட்டரர்.

அம்மா மௌனமாகி விட்டாள்

"பொடியனுக்கு என்ன வேலை?" பெண்வீட்டார் கேட்ட கேள்வி பெரியண்ணனை எவ்வளவு தூரம் பாதித்து வேதனைப்படுத்தி இருக்கிறது என்பதை எஸ்.எஸ்.சி படிக்கின்ற தங்கையின் படிப்பின் மீது அவன் எடுத்த நடவடிக்கை உணர்த்துகிறது.

'சிவப்பி' வெட்கமில்லாமல் கத்துகிறது.

மூத்ததங்கச்சி – ?

பெரியண்ணனுக்கு திருமணம் நடந்துவிட்ட பிறகுதானே அவளைப்பற்றி அம்மாவோ அண்ணனோ சிந்திப்பார்கள்.

நாளை காலையில் அம்மா 'சிவப்பியை' அவிழ்த்து விட்டு விடுவா. அது எங்கேயாவது போய்விட்டு இரண்டு மூன்று நாளில் திரும்பவும் வந்துவிடும் அது வந்தவுடன் அதற்கு வழக்கமாக நடக்கின்றவை நடக்கும்.

மூத்த தங்கச்சி வீட்டைவிட்டுப்போனால் 'சிவப்பி'யை போல அவளை ஏற்றுக் கொண்டுவிடுவாளா?

அவளுக்கு திருமணம் நடந்த பிறகுதானே 'அனுமதி' வழங்கப்படும். அவளுக்கு உடலெல்லாம் சிலிர்த்துக் கொண்டது.

பெரியண்ணனைப் போல வேலை இல்லாத ஒருவனை அம்மாவோ பெரியண்ணனோ பேசிவந்தால் அவள் ஏற்றுக்கொள்வாளா? பேசித்தான் வருவார்களா?

'நிரந்தர வருமானமும் வேலையும் இல்லாதவனை கட்டிப் போட்டு கட்டிப்பிடித்துக்கொண்டா அழுகிறது..." "மூத்த தங்கச்சியின் வாய் அவசரமாக முணுமுணுத்துக் கொண்டது.

திருமணம்தான் ஒருத்திக்கு வாழ்க்கையை நிச்சயப்படுத்துகிறது என்பது உண்மையானால் மணவாளனாகப் போகிறவனின் வேலையைப் பற்றி பெண்வீட்டார் அக்கறையோடு விசாரிக்கத்தானே வேண்டும்.

சுமை இறக்கி வைக்கும் போது அத்திவாரம் சரி இல்லாத சுமைதாங்கிமேலா இறக்கி வைப்பார்கள்?

நிரந்தரமானதும், பாதுகாப்பானதும் தேவையான நேரத்தில் தனது உரிமைக்கு எதிராக வாதாடக் கூடியதுமான அரசாங்கத் தொழில் செய்கின்றவனின் மேல் பெண் சுமையை இறக்கி வைக்க ஒவ்வொரு பெற்றோர்களும்போட்டி போடுவதில் நியாயம் இருக்கிறது தானே.

'டிமான்ட்' பொருளுக்கு சந்தையில் விலை கூடுவது புதினமா?

சின்னண்ணன் நினைக்கிறது மூத்ததங்கச்சிக்கு இப்போது சரியாகப் புரிகிறது. நிரந்தரமான வேலை இங்கு கிடையாத பட்சத்தில் வேலைவாய்ப்புத் தேடி வெளிநாடு போகவேண்டுமென்று சின்னண்ணன் இன்னும் நினைத்துக் கொண்டிருப்பதில் என்னபிழை?

சின்னண்ணனைப்போல ஒவ்வொரு இளைஞனும் உத்தியோகமோ — வெளிநாட்டில் வேலை வாய்ப்போ — ஏதாவது ஒன்றுக்காக அலைவது திருமணச் சந்தையில் தன்னுடைய மதிப்பை உயர்த்திக்கொள்ள மட்டும்தான்.

வளமானதும் - செழிப்பானதும் - முதுமையானதுமான ஒரு இல்லற வாழ்க்கையை இனிதாக வாழ ஆசைப்படுவதும் - வாழ்வதற்கு நிரந்தர வருமானமுள்ள ஒரு உத்தியோகம் கைகொடுக்கும் என்பதனால்தானே.

'ஆண்டவா... பெரியண்ணனுக்கும் சின்னண்ணனுக்கும் ஒரு வேலையைக்கொடு,' இரக்கமாக வேண்டிக் கொண்டாள் மூத்த தங்கச்சி.

ஓலைப்பெட்டி ஒன்றின் மேல் கைவிளக்கு எரிகிறது...

துருவுபலகைமேல் இருந்து கொண்டு உயரத்துக்காக பெட்டி மேல் கோப்பையை வைத்துக் கொண்டு பெரியண்ணன் சாப்பிடுகிறான், அம்மா பரிமாறுகிறாள்.

'உந்த இடமில்லாவிட்டால் வேறை இடமில்லையோ... அவர்கள் சொன்னதுக்காக ஏண்டா மண்டையைப் போட்டு உடைக்கிறாய்'.

அன்புடன் பேசினாள் அம்மா அவள் குரல தழுதழுக்கிறது.

"கொஞ்சம் குழம்பு விடணை கலியாணம் குழம்பிப் போச்சுதெண்டு நான் கவலைப்படேல்லை இன்னுமொரு இடத்திலை பேசினாலும் இதே கேள்வியைத்தானே அவங்களும் கேட்பாங்கள்...

அரசாங்கத் தொழிலையுள்ள பாதுகாப்பும் வலிமையும நிரந்தர வருமானமும் மற்றதொரு தொழிலுக்கும் நடைமுறையிலை இருக்குமெண்டால் அரசாங்கத் தொழிலுக்கு மதிப்பு ஏன் கூடுது. மற்ற தொழில்களும் அரசாங்கத் தொழிலைப்போல அந்தஸ்த்துப் பெற்றுக்கொண்டால் எனக்கு பேசின கலியாணம் ஏனெணை குழம்புது அவையள் கேட்டகேள்வியிலையும் என்ன பிழை. கடையிலை இருந்து கொண்டு ஒருத்தியைக் கலியாணம் கட்டிப்போட்டு கடையைவிட்டு என்னை விலத்தினால் என்ரை குடும்பம் வாழறதுக்கு வழிஎன்ன?

இருக்கிற சுமையும் காணாதெண்டு நானும் ஒரு சுமையாக வெல்லோ போவிடுவன். நிரந்தர உத்தியோகமில்லாத எனக்கு ஒரு பெண்ணும். கலியாணமும் இனி யாருமே எனக்கு கலியாணமொன்றும் பேசவேண்டாம்...

தங்கச்சியும் தும்பாகி விட்டாள். கிடக்கிறதுகளை வித்தோ அடகு வைச்சோ அவளுக்கு உத்தியோகக்காரனொருவனை கட்டிவைச்சிடவேணுமெணை," செம்பில் கிடந்த தண்ணீரால் கோப்பைக்குள் கையை கழுவிவிட்டு அவன் எழும்பி விட்டான்.

பெரியண்ணனின் கதையை திண்ணையில் இருந்து கேட்டுக்

(8 பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளிவந்துவிட்டது! வாங்கி விட்டீர்களா!**

எண்சோதிட நிபுணர்

**எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்**

எழுதிய

# அதிர்ஷ்ட வழிகாட்டி

விலை: **9-50**

V. P. P. யில் பெறவிரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும் வியாபாரிகளுக்கு **10** வீத கமிசன் கொடுக்கப்படும்.

ATHIRSHDA NUMEROLOGY PUBLICATIONS
19, CHAPEL STREET
JAFFNA.






துரித சலவைக்கும் சிக்கன சலவைக்கு

**மில்க்வைற் சலவைப் பவுடரை**

வாங்கி உபயோகியுங்கள்

**சிறிய பைக்கற் விலை ஒரு ரூபா மட்டுமே**

மேலுறைகளை அனுப்பி பெறுமதிவாய்ந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## மில்க்வைற் யாழ்ப்பாணம்



# சிரித்திரன்

# 1982

**மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு...**

அதனையொட்டி இவ்வாண்டு முதலே தமிழ்கூறும், நல்லுலகெங்கும்

**பாரதி விழாக்கள்**

கொண்டாடப்படவுள்ளன.

**அடுத்த இதழ் சிரித்திரனில்**

## பாரதி மலராக

மலரவுள்ளது



பாரதியார் பற்றிய சுவையான விஷயங்களை வாசகர்கள், படைப்பாளிகளிடமிருந்து வரவேற்கிறோம்.

● பிரதிக்கு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



அழகுக் கலைக்கோலம் தரும்

அற்புதப் பிடவைத் தினிசுகளுக்கு

ஒப்பற்ற இடம்

## சிங்காரம்ஸ்

தங்கையர் நாடும் நலநாகரீக நகைகளுக்கு

## டைமா நகைமாளிகை

செட்டியார் தெரு.
கொழும்பு.

தொலைபேசி: 20875.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம தபாற்கந்தோரில் செய்திப்பத்திரிகையாகப் பதிவு செய்யப்பெற்றது. பதிவு இலக்கம் பி கியூ35/000.




# இது திருமணக்காலம்

மணமகள் மனம்நாடும்
கண்கவர் - கலைத்துவம் மிக்க
தங்க வைர நகைகளை
பெற்றுக்கொள்ள.

யாழ்நகரில் இணையற்ற இடம்

மணமகன்; கண்ணே உங்களை கவர்ந்த ஆபரணம் எது?

மணமகள்; எனக்கு பாலமுரளி கிருஷ்ணாவின் சங்கராபரணமும் பிடிக்கும்... செல்லையா சிவபாத லிங்கத்தின் தங்க ஆபரணங்களும் பிடிக்கும்...

# செல்லையா சிவபாதலிங்கம்

(வைரக்கல் நகை வியாபாரம்)

220 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்—

தொலைபோசி 7794


559, கே. கே. எஸ் வீதி யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சி. சிவஞானசுந்தரம் அவர்களால்,
559, கே. கே. எஸ் வீதியில் உள்ள கவின் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org